கடன் மற்றும் அடைமான ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தம் __________________ இல் ________ அன்று திட்டத்தில் குறிப்பிட்டுள்ள பெயர்(கள்) மற்றும் முகவரி(கள்) உள்ள முதலாம் தரப்பு நபர்களுக்கும் (இதன்பிறகு இவர்கள் "கடன்பெறுபவர்கள்" எனப்படுவர்) திட்டத்தில் விவரங்கள் குறிப்பிட்டுள்ள இதன் பிறகு இவர்கள் உத்தரவாதமளிப்பவர்(கள்) எனப்படும் இரண்டாம் தரப்பு உத்தரவாதமளிப்பவர்(கள்) மற்றும் 1956-க்குக் கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ள மற்றும் RBI சட்டம், 1934-ன் கீழ் இந்திய ரிசர்வ் வங்கியால் வங்கியியல் அல்லாத நிதி நிறுவனத்தின் வணிகத்தை மேற்கொள்வதற்கு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள மற்றும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் தலைமை அலுவலகங்களை முறையே 4வது மாடி வீடியோகான் டவர், E-1, ஜான்தெவாலன் எக்ஸ்டென்ஷன், புதுடில்லி-110055 ல் கொண்டுள்ள, மற்றும் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் கிளை அலுவலகங்களில் ஒன்றைக் கொண்டுள்ள நிறுவனமான மூன்றாம் தரப்பான புஸான் ஆட்டோ பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Bussan Auto Finance India Private Limited) என்ற நிறுவனத்திற்கும் (இதன்பிறகு இது "BAF" எனப்படும்) இடையில் மேற்கொள்ளப்படுகிறது.

"கடன்பெறுபவர்(கள்)", "உத்தரவாதமளிப்பவர்(கள்)", "BAF" ஆகிய சொற்கள், சூழ்நிலைக்கு முரண்பட்டால் தவிர, அவற்றிற்குரிய சட்ட வாரிசுகள், பிரதிநிதிகள், பின்தொடர்ந்து நிர்வகிப்பவர்கள், அதிகாரிகள், நிர்வாகிகள் மற்றும் நியமிப்பவர்களை உள்ளடக்கும்.

இதன்படி திட்டம் என்ற பிரிவில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ள வாகனத்திற்காக "BAF" இடம் கடன்பெறுபவர்(கள்), உத்தரவாதமளிப்பவர்(கள்) நிதி/கடன் வசதி (இதன்பிறகு "கடன் வசதி" எனப்படும்) கேட்டு அணுகியுள்ளனர், "BAF" ஆனது கடன் மற்றும் அடைமான ஒப்பந்தத்திலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி, திட்டத்தில் குறிப்பிட்டுள்ள வரம்பு(கள்) வரையான கடனை அளிக்க ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இப்போது தரப்புகளால் மற்றும் தரப்புகளுக்கு இடையில் பின்வருமாறு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது:

1. வரையறைகளும் விளக்கங்களும்

1.1 இந்த ஒப்பந்தத்தில், பின்வரும் அர்த்தங்கள் பொருந்தும்:

"ஒப்பந்தம்" என்பது வாகனத்திற்கு இணையாக, மிகக் குறிப்பாக திட்டத்தில் விளக்கப்பட்டுள்ளவைக்கு இணையாக, கடன் வசதி வழங்குவதற்கான கடன் ஒப்பந்தத்தைக் குறிக்கிறது, மேலும் இது, இந்த ஒப்பந்தத்திற்குத் தொடர்பாகச் செயற்படுத்தப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் உள்ளடக்கும்.

"BAF" என்பது, கம்பனிகள் சட்டம், 1956-க்குக் கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ள மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் வங்கியியல் அல்லாத நிதி நிறுவனத்தின் வணிகத்தை மேற்கொள்வதற்கு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள, புதுடில்லியில் தலைமை அலுவலகத்தையும், திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் அதன் கிளையையும் கொண்டுள்ள புஸான் ஆட்டோ பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Bussan Auto Finance India Private Limited) நிறுவனத்தைக் குறிக்கிறது.

"கடன்பெறுபவர்" என்ற சொல், ஒப்பந்தத் திட்டத்தில் பெயர்(கள்) மற்றும் முகவரி(கள்) குறிப்பிட்டுள்ள, கடனைப் பெறுகின்ற, கடன்பெறுபவராக இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுகின்ற ஒரு அல்லது பலர் நபர்(கள்)/சிறுநிறுவனம்(களை) குறிக்கிறது, இந்த ஒப்பந்தத்தை ஒவ்வொருவரும் மேற்கொண்டுள்ளதாகக் கருதப்படும், ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் அனைவரும் பொறுப்புகளைக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஏற்கிறார்கள்.

"உத்தரவாதமளிப்பவர்" என்ற சொல், இந்த ஒப்பந்தத்திற்கான திட்டத்தில் பெயர்(கள்) மற்றும் முகவரி(கள்) குறிப்பிட்டுள்ள, கடனைத் திருப்பியளிக்க உத்தரவாதமளிக்கின்ற மற்றும் கடன்பெறுபவரும் அவரும் ஒழுகவேண்டிய இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள கடப்பாடுகளின் சுமையை ஏற்று இந்த ஒப்பந்தத்தை உத்தரவாதமளிப்பவர்(கள்) எனும் முறையில் நிறைவேற்றுகின்ற ஒரு அல்லது பலர் நபர்(கள்)/சிறுநிறுவனம்(களை) குறிக்கிறது, இந்த ஒப்பந்தத்தை ஒவ்வொருவரும் மேற்கொண்டுள்ளதாகக் கருதப்படும், ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் அனைவரும் தம்முடனும் கடன்பெறுபவர்(களுடனும்) பொறுப்புகளைக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஏற்கிறார்கள்.

"கடனளிக்கும் கிளை" என்பது திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இடத்திலுள்ள "BAF"-ன் கிளை அலுவலகம் ஆகும்.

"EMI" அல்லது "சமமான மாதாந்திர தவணை" என்பது கடன்பெறுபவர் ஒவ்வொரு மாதமும் "BAF"-க்குச் செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்கும், இதில் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மொத்தமாகச் செலுத்த வேண்டிய தொகையை (கடனுக்கான முதல் மற்றும் அதற்கான வட்டி, இது ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதத்தில் தினமும் கணக்கிடப்பட்டு, மாதாந்திரத்தில் பயன்படுத்தப்படும்) மொத்தத் தவணைகளின் எண்ணிக்கையால் வகுப்பதால் வரும் தொகை அடங்குகிறது, இத்தொகை அடுத்த ரூபாய்க்கு முழுதாக்கப்படுகிறது.

"கடன் வசதி" என்பது திட்டத்தில் குறிப்பாக விளக்கப்பட்டுள்ள வாகனத்தை வாங்குவதற்கான இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளில் "BAF" ஆல் ஒப்புதலளிக்கப்படும்/வழங்கப்படும் கடன்(கள்)/நிதி வசதியைக் குறிக்கும்: "கடன்" என்ற சொல், சூழலுக்கு ஏற்ப, இந்த ஒப்பந்தத்தின் சரத்துகளைப் பயன்படுத்திய பிறகு ஒன்றுசேரும் அனைத்து நிலுவைத்தொகைகள் மற்றும் செலுத்தவேண்டியுள்ள கடனின் முதல் தொகையைக் குறிக்கிறது மற்றும் அவை அனைத்தையும் உள்ளடக்குகிறது,

"செலுத்தாத தொகைக்கான வட்டி வீதம்" என்பது, திட்டத்தில் குறிப்பிட்டவாறு "BAF"-க்கு கடன்பெறுபவரால் செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்படாமல் இருந்தால், அந்த செலுத்தாமல் விடப்பட்டிருக்கும் EMI மற்றும் பிற கட்டணங்கள், செலவுகள், விலைகள், செலவுத்தொகை, இன்னபிற போன்றவற்றின் மீது ஒன்றுசேர்க்கப்பட்டுள்ள வட்டியைக் கணக்கிட இணங்கியுள்ள வட்டி வீதமாகும்.

"தரப்புகள்" என்பது "BAF" மற்றும் கடன்பெறுபவரைக் கூட்டாகக் குறிக்கிறது.

"வாகனம்" என்பது, இந்த ஒப்பந்தத்திற்கான திட்டத்தில் அதிக குறிப்பாக விளக்கப்பட்டுள்ள, வாங்குவதற்காக "BAF" மூலம் கடன் வழங்கப்பட்ட வாகனத்தைக் குறிக்கிறது.

"திட்டம்" என்பது இந்த ஒப்பந்தத்திற்கான திட்டத்தைக் குறிக்கிறது.

1.2 இந்த ஒப்பந்தத்தில், தேவைப்படுமாறு சூழலைப் பொறுத்து ஒருமையில் பன்மையும் குறிப்பிடப்படலாம், ஆண் பாலினத்தில் பெண் பாலினம் அல்லது நடுநிலையான பாலினம் குறிப்பிடப்படலாம்.

1.3 இதில் வரையறுக்கப்படாத எந்தவொரு அர்த்தமும், பொதுவான சரத்துகள் சட்டம், 1897-ல் வரையறுக்கப்பட்டிருந்தால், கூறப்பட்டுள்ள சட்டத்திலுள்ள பொருளே இங்கும் கொள்ளப்படும்.

1.4 இந்த ஒப்பந்தத்திலுள்ள சரத்துகளின் ஒழுங்குமுறை அவற்றின் விளக்கத்தில் எதுவித அர்த்தத்தையும் கொண்டிருக்காது. சரத்துத் தலைப்புகள் வசதிக்காக மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன மற்றும் அவை இதுகுறித்த சட்டப்பிரிவுகளைப் பாதிக்காது.

2. கடன் வழங்குவதற்கு "BAF'ன்" ஒப்பந்தம் மற்றும் கடன்பெறுவதற்கு கடன்பெறுபவரின் ஒப்பந்தம்

2.1 கடன்பெறுபவர் மற்றும் உத்தரவாதமளிப்பவரின் கூட்டான கோரிக்கை, இதில் மற்றும் கடன் வசதிக்கான விண்ணப்பம் மற்றும் கடன் வசதி சார்ந்து கடன்பெறுபவரால் நிறைவேற்றப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட பிற ஆவணங்களில் உள்ளவாறு பிரதிநிதித்துவங்கள், உத்தரவாதங்கள், உடன்பாடுகள் மற்றும் செயற்பாடுகளின் அடிப்படையில் கடன் பெறுபவருக்கு கடனளிக்க, "BAF" ஒப்புக்கொள்கிறது, மேலும், ஒப்பந்தத்திலும் திட்டத்திலும் முழுதாக விளக்கியுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் வாகனத்தை வாங்குவதற்காக கடன் வசதியை "BAF" இடமிருந்து பெற கடன்பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

2.2 கடனளிப்பவர் மற்றும் கடன்பெறுபவராக "BAF" க்கும் கடன்பெறுபவருக்கும் இடையிலான உறவுமுறை இந்த ஒப்பந்தத் தேதியிலிருந்து தொடங்குகிறது, கடன்பெறுபவரின் பக்கத்தில் ஏதேனும் தொகை செலுத்தப்படாத காரணத்தால் BAF மூலம் தீர்மானிக்கப்படுகிற அல்லது முடிக்கப்படுகிற வரை இது செயலில் இருக்கும் மற்றும் இந்த ஒப்பந்தம் மற்றும் இதற்குப் பொருத்தமான எல்லாப் பிற ஆவணங்களின் கீழ் "BAF"-க்கு கடன்பெறுபவரால் செலுத்த வேண்டிய எல்லாப் பணமும் கடன்பெறுபவரால் முழுதாகச் செலுத்தப்பட்டு, "BAF"-ஆல் பெறப்படும் வரை இது தொடர்ந்து கடன்பெறுபவரின் பொறுப்புகளைத் தீர்மானிக்கும்.

3. கடன்/நிதி வசதி வழங்கல்-

கடன்பெறுபவருக்கும் "BAF"-க்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்பட்டால், "BAF" ஆனது கடன்பெறுபவருக்கு கடன் வசதியை வழங்குகிறது, "BAF" தீர்மானிக்கவுள்ளபடி கடன் தொகையை ஒரே தொகையாக அல்லது பொருத்தமான தவணைகளில் சப்ளையர்/டீலரின் பெயரில் அல்லது கடன்பெறுபவருக்காகவும் அவரின் சார்பாகவும் சப்ளையர்/டீலருடனான பரஸ்பர சரிப்படுத்தல்/ ஏற்பாட்டின்படி கடனை விநியோகித்து/விடுவித்து, ரசீதை அளிக்கிறது, மேலும் கடன் மற்றும் அடைமான ஒப்பந்தமானது கடன்பெறுபவருக்கு வாகனத்தை வழங்கும் அந்தச் சமயத்தில் செயற்படுத்தப்படும்.

3.1 கடனை வழங்குவதற்கான உரிமையை "BAF" தனக்கென தனியாகத் தக்கவைத்துள்ளது, பின்வரும் சூழ்நிலைகள் இல்லாவிட்டால் எந்தவொரு தொகையையும் அது விடுவிக்காது :-

அ. கடன் மற்றும் அடைமான ஒப்பந்தமானது முறையாக செயற்படுத்தப்பட்டு, கடன்பெறுபவரால் "BAF"-க்கு அளிக்கப்படுகிறது:

ஆ. கடன்பெறுபவர், திருப்பியளிக்கும் தவணைகளுக்காக பின்தேதியிட்ட காசோலைகளை "BAF"-க்கு அளிக்கிறார்

இ. "BAF" தனது சொந்த விருப்பில் ஏதேனும் பிற ஆவணம் அல்லது எழுத்துமூலப் பத்திரத்தைக் கேட்கலாம்.

4. வட்டி மற்றும் கடன் கணக்கு

4.1 இந்த ஒப்பந்தத்திற்கான திட்டப்படி கடன் மீதான வட்டியைச் செலுத்த, கடன்பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்

4.2 கடன்/நிதி வசதி மீதான வட்டியானது, கடன்பெறுபவரிடம் வாகனத்தைக் கையளிக்கும் போதே ஒப்பந்த தேதியில் தொடங்கும்

4.3 கடனின் வட்டித் தொகையானது திருப்பியளிக்கும் அக வீத அடிப்படையில் மாதாந்திரம் கணக்கிடப்படும்.

4.4 சேவைக் கட்டணங்கள், செயலாக்கும் கட்டணம் மற்றும் வேறு ஏதும் கட்டணங்கள், வரி, செலவுகள் அல்லது தீர்வை என சேவை வரி உட்பட அது எந்தப் பெயரில் இருந்தாலும் அவற்றை கடன்பெறுபவர் மட்டுமே செலுத்த வேண்டும், அத்தொகையை BAF செலுத்தியிருக்கும் பட்சத்தில், குறித்த தொகையைத் தனியாக BAF இடம் திருப்பியளிக்க, கடன்பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்

4.5 இந்த ஒப்பந்தத்தின் கீழ், கடன்பெறுபவர் செலுத்தாமலிருக்கும் மற்றும் செலுத்தவேண்டிய தொகைகள் அனைத்திற்கும் கடன்பெறுபவரின் கடன் கணக்கிலிருந்து வசூலிக்க/பற்றுவைக்க "BAF" -க்குத் தகுதியிருக்கும் (இதில் வட்டி வரி, கட்டணங்கள், செலவுகள், முத்திரை வரி, செயலாக்கக் கட்டணம், உள்நுழைவுக் கட்டணங்கள், செலவுகள், சேவை/மற்றும் கடன்பெறுபவரிடமிருந்து "BAF" தனியாகத் திருப்பிப்பெற்றால்/ சேகரித்தால் அன்றி, வழங்கப்படும் கடன் வசதி தொடர்பாக "BAF" தாங்கிய பிற கட்டணங்கள்/செலவுகள் ஆகியவையும் இதர செலவுகளும் அடங்கும். இந்தத் தொகையானது கடனின் ஒரு பகுதியை உருவாக்கும்.

4.6 கடன் தொகைக்காக விதிக்கப்படும் EMIகளின் நிலுவைகள், செலவுகள், கட்டணங்கள், செலவுத்தொகைகள், இன்னபிற உட்பட, கட்டணத்திற்காகச் செலுத்தாமலிருக்கும் அனைத்துத் தொகைகளுக்கும் (அதாவது, "BAF"-க்கு நிலுவையில் இருக்கும்போது கடன்வாங்குபவரால் செலுத்தாமலிருப்பது) செலுத்தாத தொகைக்காக நியமிக்கப்பட்ட வட்டி வீதம்/கட்டணங்கள் விதிக்கப்படும், இந்த வட்டி மற்றும் அபராதத் தொகைகளை விதிப்பதற்காக காரணம் எதையும் தெரிவிக்க வேண்டிய அவசியமிருக்காது.

5. கடனைத் திரும்பச் செலுத்துதல்

5.1 கடனைத் திரும்பச் செலுத்துதல் (முதல், அதன் மீதான வட்டி மற்றும் ஏதேனும் பிற கட்டணங்கள், பிரீமியம், செலவுகள், வரிகள், தீர்வைகள் அல்லது இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளில் "BAF"-க்கு கடன்பெறுபவர் வழங்க வேண்டிய தொகைகள் உட்பட) ஆனது கடன்பெறுபவரால் மேற்கொள்ளப்படும் :-

அ. முதல் மற்றும் வட்டியைத் திருப்பிச்செலுத்துதல் குறித்து திட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு, பின்தேதியிட்ட காசோலைகள்/ECS மூலம் சமமான மாதாந்திரத் தவணை (EMI) வழியாக; மேலும் கடனைத் திருப்பிச்செலுத்துவதற்காக பின்தேதியிட்ட காசோலையை/ECS சட்டக்கட்டளையை வழங்க, கடன்பெறுபவர்(கள்) ஏற்கிறார்கள் மேலும் காசோலைகள்/ECS சட்டக்கட்டளையை ஏய்ப்பது சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய குற்றம் என்பது முற்றாகத் தெளிவான விஷயமாகும். தனது வங்கிக் கணக்கைப் பேணும் பொறுப்பை கடன்பெறுபவர்(கள்) மேற்கொள்கிறார், அவரது/அவர்களது கடன் மற்றும் அடைமான ஒப்பந்தம் தொடரும் காலத்தில் வங்கிக் கணக்கை மூட மாட்டார்;

ஆ. செல்லாத காசோலை அல்லது செல்லாத ECS சட்டக்கட்டளைக்குப் பதிலாக அல்லது நிலுவை அல்லது செலுத்த வேண்டிய தொகையை கிளையில் (அல்லது "BAF" தெரிவிக்கும் வேறொரு இடத்தில்) ரொக்கமாகச் செலுத்தலாம்

5.2 "BAF"-க்கு கடன் தொகைகள் அனைத்தையும் செலுத்தி முடிக்கும் வரை, EMI மற்றும் கடன் தொகைமீது விதிக்கக்கூடிய பிற கட்டணங்கள், செலவுகள், வரிகள், தீர்வைகள் போன்றவற்றைத் தொடர்ந்து திருப்பியளிக்க கடன்பெறுபவர் இணங்குகிறார்.

5.3 கடன்பெறுபவரிடம் வாகனத்தை வழங்கியவுடனே கடனைத் திரும்பச் செலுத்தும் திட்டப்படி, திரும்பச் செலுத்துதல் தொடங்கும். திரும்பச் செலுத்துதல் திட்டம்/அட்டவணையுடன் கண்டிப்பாக இணங்குவது, இந்தக் கடன் வசதி வழங்கலுக்கான ஒரு அவசிய நிபந்தனையாகும்.

5.4 கடன்பெறுபவருக்கு அவரது/அவர்களது நிலுவைத் தேதி ஒவ்வொன்றிலும் ஒழுங்காக EMI-ஐத் திருப்பியளிக்க வேண்டும் என்ற அறிவிப்போ, நினைவூட்டலோ, தெரிவிப்போ அனுப்பப்படாது. "BAF" இடம் சரியான நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவது அவரது/அவர்களது முழுமையான பொறுப்பாகும். EMI எதையும் செலுத்தத் தாமதிப்பது அல்லது செலுத்தாமல் விடுவதால், திட்டத்தில் குறிப்பிட்டவாறு செலுத்தாமலிருக்கும் வட்டி வீதத்தில் (செலுத்தாத காலத்திற்கு) வட்டியை "BAF"-க்கு கடன்பெறுபவர்(கள்) செலுத்த வேண்டும், இதுதவிர பணம் செலுத்தாமலிருக்கும் நிகழ்வானது இந்த ஒப்பந்தத்தைத் தீர்மானிக்கும்/முடிக்குமாறு BAFக்குத் தகுதியை அளிக்கும், இதனால் இந்த ஒப்பந்தத்தின் கீழ் "BAF"-க்குச் செலுத்தாமலுள்ள மற்றும் செலுத்த வேண்டிய தொகை அனைத்தையும் மொத்தமாக உடனடியாகச் செலுத்தவேண்டி ஏற்படும்.

5.5 திரும்பச் செலுத்தும் தவணைகளுக்கு முன்கூட்டியே திரும்பச் செலுத்துவது அட்டவணையில் குறிப்பிட்டவாறு முன்கூட்டிய கட்டணங்களை ஆதாயமாக்கும்.

5.6 குறிப்பிட்ட வாகனம் வேலை செய்யும் நிலையில் உள்ளதா அல்லது ஏதேனும் பழுதுபார்ப்பு தேவையா அல்லது வேறுவகையில் செயலற்றதா என்பதைப் பொருட்படுத்தாமல், "BAF"-க்குச் செலுத்தாமல் விட்ட மற்றும் நிலுவையிலுள்ள தொகையை, அட்டவணையில் குறிப்பிட்டவாறு, கடன்பெறுபவர் EMIகளை தொடர்ந்து "BAF"-க்கு செலுத்துவார் மற்றும் மேற்குறித்த வாகனத்தின் பழுதுபார்ப்புக்கோ, செயல்படாமைக்கோ "BAF" உத்தரவாதமோ பொறுப்போ ஏற்காது.

5.7 அட்டவணைப்படி EMI-ஐச் செலுத்துவதைத் தவிர்ப்பதற்கு அல்லது இதிலுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடனைத் திருப்பிச்செலுத்துகிற கடன்பெறுபவரின் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு வாகனத்தின் இழப்பு, திருட்டு, அழிவு அல்லது சேதம் போன்ற எந்தவொரு நிகழ்வையும் காரணமாகக் கூற முடியாது, இது இந்த ஒப்பந்தத்தைத் தொடர்வதா என்பதைப் பாதிக்கும். எவ்வாறு இருந்தாலும் அவ்வாறான நிகழ்வு எதிலும் EMIகளை காலந்தாழ்த்தாமலும் ஒழுங்காகவும் தொடர்ந்து செலுத்த, கடன்பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

5.8 கடன்பெறுபவரால் BAF-க்கு வழங்கப்பட்ட PDCகள்/கொடுக்கப்பட்ட ECS சட்டக்கட்டளைகளில் எதுவும் அல்லது எல்லாம் மேலுள்ள சரத்துகளுக்கு இணங்குகிறது என்றால்:

அ) BAF-இன் பாதுகாப்பில் இருக்கும்போது தொலைந்துவிட்டது/ன, அழிந்துவிட்டது/ன அல்லது தவறான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது/ன,

ஆ) இறப்பு, நொடிப்புநிலை, கிறுக்கு, அதிகாரம் முடித்தல் அல்லது கையொப்பமிடுபவர் அல்லது ஏதேனும் அல்லது அதிக கையொப்பமிடுபவர்கள் (ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால்) கலைக்கப்பட்டால் அல்லது காசோலையில் பெயருள்ளவரின் கடன் தவணை உரிமை காரணமாக ரொக்கமாக மாற்ற முடியாமல் போகும்.

இத்தகைய சந்தர்ப்பத்தில், பத்தியில் குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட பொருந்தக்கூடிய இறுதிநிலையில் கடன்பெறுபவர் (அல்லது வாரிசுகள்), கடன்பெறுபவரின் சட்டப் பிரதிநிதி அத்தகைய இழப்பு, அழிவு அல்லது BAF தவறான இடத்தில் வைக்கப்படுதல் (ரொக்கமாக இருந்தால்) அல்லது குறிப்பிட்ட காசோலையைப் பணமாக மாற்ற முடியாவிட்டால், இவற்றைப் பற்றிய அறிவிப்பைப் பெற்றதும், இழக்கப்பட்ட, சேதமான, தவறாக வைக்கப்பட்ட அல்லது ரொக்கமாக மாற்ற முடியாத BAF இடம் வழங்கப்பட்ட காசோலைகள் அத்தனையையும் ஈடுகட்டப் போதிய அல்லது BAF-ஆல் ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றும் அனுமதிக்கப்படும் முறையில் கடனைத் திருப்பிச் செலுத்த பொருத்தமான ஏற்பாட்டைச் செய்யவும்.

இ) காரணம் எதுவாக இருந்தாலும் BAF-ஆல் காசோலைகளை அளிக்காமல் அல்லது ECS சட்டக்கட்டளையைப் பயன்படுத்தாமையானது கடன்பெறுபவரால் BAF-க்கு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கடன்பெறுபவரின் பொறுப்பைப் பாதிக்காது என்பதை இது கடன்பெறுபவர் ஏற்றுக்கொள்கிறார் மற்றும் புரிந்துகொள்கிறார். எந்த வழியிலும் BAF ஆனது பணமாக்கத்தில் ஏற்படும் தாமதம், தவிர்ப்பு அல்லது அலட்சியத்திற்குப் பொறுப்பாகாது. கடன்பெறுபவர் அவரது/அவர்களது கணக்கில் எப்போதும் போதிய பணத்தைப் பேண வேண்டும், இது எந்த நேரத்திலும் எல்லாக் காசோலைகளையும் பணமாக்குவதற்கு உதவும்.

ஈ) கடன்பெறுபவர்(கள்) வழங்கும் காசோலை எதுவும் செல்லுபடியாகாவிட்டால் மற்றும் மீண்டும் வழங்கப்படும் போது, ஏற்றுக்கொள்ளப்பட்டால், ஆனால் இடைப்பட்ட நேரத்தில் செல்லுபடியாகாமல் போன காசோலையின் ரொக்கத் தொகை வைப்புச் செய்யப்பட்டால், விளைவாக ஏற்படும் ஏதேனும் இரட்டைக் கட்டணத்திற்கு BAF பொறுப்பேற்காது. எனினும், அளவுக்கதிக கட்டணம் திருப்பியளிக்கப்படும் அல்லது தரப்புகளுக்கு இடையிலான பரஸ்பர தீர்வின்படி சரிப்படுத்தப்படும்.

புஸான் ஆட்டோ பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Bussan Auto Finance India Private Limited) நிறுவனத்தின் சார்பில்

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்

☞ கடன்பெறுபவர்

X சக கடன்பெறுபவர்

✓ உத்தரவாதமளிப்பவர்

✓ உத்தரவாதமளிப்பவர்

X சக கடன்பெறுபவர்

☞ கடன்பெறுபவர்

உ) ஏதேனும் காரணத்திற்காக காசோலைகள் எதனதும் (இதிலுள்ள விதிகளின்படி கடன்பெறுபவரால் ஏற்கனவே BAF-க்கு அளிக்கப்பட்டது) சேதம் அல்லது இழப்பு எதற்கும் அல்லது தாமதம் போன்றவை எந்த வகையிலும் BAF-ன் உரிமைகள் எதனதும் விட்டுக்கொடுப்பு எதையும் குறிக்காது.

6. பிணையம் மற்றும் அடைமானம்

6.1 "BAF"-ஆல் முன்னெடுக்கப்படும் கடன் வசதி எதையும் கருத்தில்கொள்கையில், "BAF" சார்பாக கடன்பெறுபவர், கடன், வட்டி மற்றும் "BAF"-க்குத் திருப்பிச் செலுத்தாத மற்றும் செலுத்தக்கூடிய வேறு பணங்களைத் திருப்பியளிப்பதற்காக இந்த ஒப்பந்தத்திற்கான அட்டவணையில் குறிப்பாக விவரிக்கப்பட்ட வாகனத்தை அடைமானம் வைக்கிறார் மற்றும் கட்டணம் செலுத்துகிறார்

6.2 "BAF" சார்பாக குறித்த சாலைப் போக்குவரத்து அவலுவலகத்தின் பதிவுச் சான்றிதழ் புத்தகத்தில் மேற்கொள்ளப்பட்ட அடைமான ஒப்புதலைப் பெற, கடன்பெறுபவர்(கள்) பொறுப்பேற்கிறார்(கள்).

6.3 வாகனத்தின் அடைமானமே BAF-க்குச் செலுத்த வேண்டிய தொகைகளுக்கு எதிரான முதல் மற்றும் பிரத்யேக கட்டணமாகும். அடைமானம் வைத்தலானது, பதிவுச் சான்றிதழில் அடைமானத்தை ஒப்புக்கொண்ட தேதி எதுவாக இருந்தாலும், இந்த ஒப்பந்தத்தைக் கையொப்பமிட்ட அல்லது வாகனத்தை வழங்கிய உடனும், இதில் எது முதலில் நடக்கிறதோ, அந்த நேரத்தில்தான் செயற்படுத்தப்படுவதாகக் கருதப்படும்.

6.4 முறையாக ஒப்புதலளிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கு BAF பொறுப்பாளி அல்ல. R.C. புத்தகம் (அடைமான ஒப்புதலுடன்) மற்றும் கடன்பெறுபவர்(கள்), அந்த R.C. புத்தகம் வழங்கப்படவில்லை என்ற சாக்குப்போக்கில் வற்புறுத்தப்படும் EMIகளின் பணத்தைச் செலுத்துவதை தடுத்து நிறுத்தாது மற்றும் அதைத் தேடிப் பெறுதல் என்பது முழுதாக கடன்பெறுபவர்களின் பொறுப்பாகும்.
எனினும், இதன்மூலம் கடன்பெறுபவர்(கள்), ஒப்பளிக்கப்பட்ட அடைமானத்தைப் பெறுவதற்கு பணம் செலுத்தத் தவறும்பட்சத்தில், அவசியம் ஏற்படும் போது பதிவுச் சான்றிதழில் அடைமான ஒப்புதலை விளைவிக்கவும், வாகனத்தை இடமாற்றவும், "BAF"-ஆல் அவசியம் எனக் கருதப்பட்டால், அதிகாரமுள்ள நபர்கள் அல்லது பிரதிநிதிகளின் வழியாக பதிவு அதிகாரி அலுவலகம், மண்டல போக்குவரத்து அதிகாரி, விற்பனை/VAT வரி அதிகாரி மற்றும் பிற அதிகாரிகள் முன்னிலையில் ஆஜர் ஆகுமாறு கேட்க BAF-க்கு உரிமையும் அதிகாரமும் (பொறுப்பிலிருந்து மாறுபாடு காட்டப்பட்டதாக) உள்ளது.

6.5 வாகனத்தைப் பயன்படுத்துவதால்/முறைகேடாகப் பயன்படுத்துவதால் மற்றும்/அல்லது செலுத்தாமல் விட அல்லது செலுத்த வேண்டியதாக இருக்கக்கூடிய என எதுவாக இருந்தாலும் வேறு ஏதும் காரணங்களுக்காக ஏற்படக்கூடிய எல்லா உரிமைகோரல்கள் மற்றும் கட்டணங்களுக்கும் எதிராக BAF -க்கு கடன்பெறுபவர்(கள்) இழப்பீட்டை மேற்கொள்கிறார்.

6.6 வழங்கப்பட்ட கடன் வசதியைத் திருப்பிச் செலுத்துவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, இந்தக் கடன் நிலுவையில் இருக்கும் காலத்தில், எந்த நேரத்திலும் "BAF"-க்குத் தேவைப்படுமாறு, கடன் வசதிக்கான ஏதேனும் கடன்பத்திரம்(கள்), வாக்குறுதிப் பத்திரம்(கள்) மற்றும் அத்தகைய பத்திரங்கள், பகர அதிகாரப் பத்திரம்(கள்)/ பொறுப்பேற்புகள் மற்றும் ஒப்பந்தங்களை கடன்பெறுபவர் செய்துமுடிப்பார்.

7. கடன்பெறுபவரின் பிரதிநிதித்துவங்கள், உத்தரவாதங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் பொறுப்பேற்புகள்

7.1 அவருக்கு கடன் வழங்குமாறு "BAF"-ஐத் தூண்டும் நோக்கில், கடன்பெறுபவர் இதன் மூலம் "BAF"-இடம் இவ்வாறு தெரிவிக்கிறார்/உத்தரவாதமளிக்கிறார்/ஒப்பந்தமிடுகிறார்/பொறுப்பேற்கிறார்-

(அ) தம்மைப் பற்றி அவர் முழுமையான துல்லியமான தகவல் மற்றும் விவரங்களை "BAF" இடம் வழங்கியுள்ளார் மற்றும் முக்கிய தகவல் எதுவும் தவிர்க்கப்படவில்லை/மறைக்கப்படவில்லை;

(ஆ) வாகனத்தை வழங்குவது, வாகனத்தில் ஏதும் குறைபாடு போன்றவற்றுக்கான பொறுப்பிலிருந்து BAF-ஐ கடன்பெறுபவர்(கள்) விடுவிக்கிறார், விநியோகத்தை ஏற்கும் முன் வாகனத்தின் நிலையைச் சரிபார்ப்பது கடன்பெறுபவரின் சொந்தப் பொறுப்பாகும், மேலும் வாகனம் வழங்கப்படவில்லை என்று அல்லது வாகனம் சரியான நிலையில் வழங்கப்படவில்லை என்று சாக்குப்போக்குக் கூறி, வரையறுத்துள்ள EMIகள் மற்றும் பிற செலவுகள், கட்டணங்கள், வரிகள், தீர்வைகள் எதையும் செலுத்த கடன்பெறுபவர் தவறமாட்டார்;

(இ) எனினும், கடன்பெறுபவர்/உத்தரவாதமளிப்பவருக்குக் காரணம் கற்பிக்கத்தக்க ஏதேனும் மோசடியானது வாகனத்தை வழங்குவது அல்லது வழங்காதது தொடர்பில் உறுதிசெய்யப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டால், கடன்பெறுபவருக்கு வாகனம் உண்மையில் வழங்கப்பட்டது எனில் கடன்பெறுபவரும் உத்தரவாதமளிப்பவரும் பொறுப்பாளியாக இருப்பர்.

(ஈ) "BAF"-இன் பெயரில் குறிப்பிட்ட இறுதி இன்வாய்ஸ் பற்றுரிமையை சரியாகப் பெறும் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988-இன் கீழ் பொருத்தமான பதிவு ஆணையத்துடன் வாகனத்தைப் பதிவுசெய்து, பதிவு ஆவணங்களில் "BAF"-இன் பற்றுரிமையின் ஒப்புதலை உறுதிப்படுத்தும். மேலும் அதன்பின் உடனடியாக, பதிவுச் சான்றிதழில் நகல்களை "BAF"-இடம் சமர்ப்பிக்கும். புதிதாகப் பதிவுசெய்ய வேண்டும் என்றால், அதை கடன்பெறுபவர் மேற்கொள்வார், அது ஒரேமாதிரியே "BAF"-க்கு அடைமானம் வைப்பதை நிலைநாட்ட ஒப்புதலளிக்கப்படும்;

(ஈ) "BAF"-இடமிருந்து அறிவிப்பையும் NOC-ஐயும் பெறாமல் வாகனத்திற்காக நகல் பதிவுச் சான்றிதழ் எதற்கும் விண்ணப்பிக்கப்படாது மற்றும் நகல் பதிவுச் சான்றிதழில் குறிக்கப்பட்ட பற்றுரிமை கிடைக்க உறுதிப்படுத்த மாட்டார்;

(உ) ஒப்பந்த காலத்தின்போது, "BAF"-ன் முன்கூட்டிய எழுத்துமூல ஒப்புதல் இல்லாமல் வாகனத்தின் பத்திரத்தின் மீது வேறு ஏதேனும் கடன் அல்லது வசதியைப் பயன்படுத்த மாட்டார் அல்லது பெற மாட்டார் அல்லது எந்த விதத்திலும் வாகனத்தைத் தடைசெய்ய மாட்டார்;

(ஊ) அடைமானம் வைக்கப்பட்ட வாகனம் மற்றும் அதன் ஒப்பந்தம், துணை ஆவணங்கள் ஒவ்வொன்றும் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் தேவைப்படுமாறு பொறுப்புகளின் செயல்திறன் ஆகியவை தொடர்பாக மோட்டார் வாகனச் சட்டம், 1988 உட்பட, இந்தியச் சட்டத்தில் மற்றும் சட்டத்தால் வேண்டப்படும் அனைத்து அங்கீகாரம், அனுமதி, ஒப்புதல்கள், காப்பீடுகள், உரிமங்கள், உத்தரவுகள் மற்றும் புதுப்பிப்புகளை முழு அளவிலும் செயல்படுத்தலிலும் பேணுவதற்கு அவசியமான அனைத்தையும் பெறுவார் மற்றும் செய்வார்;

(எ) கட்டுப்பாடுகளிலிருந்து விலக்க அல்லது விதிவிலக்குகளாக அல்லது மிகையாக ஆபத்துகள் எதையும் தவிர்த்து காப்பீட்டின் முழுமையான கொள்கையின் கீழ் "BAF"-ஆல் அனுமதிக்கப்படுவதற்கு வாகனத்தை ஒரு காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யுமாறு (அதன் முழு பதிலீட்டு மதிப்புக்கு) "BAF" கேட்கக்கூடும் என்பதால், விபத்து, தீ, கலவரங்கள், நிலநடுக்கம், பொதுமக்கள் கிளர்ச்சி, திருட்டு மற்றும் காப்பீட்டால் பாதுகாக்கப்படும் அனைத்துப் பிற ஆபத்துகளும் உட்பட இழப்புகள் அல்லது சேதங்கள் அனைத்திற்கும் எதிராக மூன்றாம் தரப்புக் காப்பீடு உட்பட, "BAF" இந்த ஒப்பந்தத்தின் தவணைக்காலம் முழுவதும் வாகனத்தை முழுவதுமாக காப்பீடு செய்து, தொடர்ந்து காத்து வைப்பார். குறிப்பிட்ட காப்பீட்டுக் கொள்கையானது "BAF"-இன் உரிமைகோரலைப் பதிவுசெய்யும் ஏற்பிசைவைத் தாங்கியவாறு, கடன்பெறுபவரின் பெயரில் எடுக்கப்படும், மேலும் முந்தைய தவணைக்கான காப்பீட்டுக் கொள்கை காலாவதியாகுவதற்கு முன் 7 நாட்களுக்குள் காப்பீட்டின் புதுப்பித்தல் தொடர்பாக "BAF"-க்கு கடன்பெறுபவர் தெரிவிப்பார், ஆனாலும் இது இந்த ஒப்பந்தத்தின் கீழ் "BAF"-இன் உரிமைகளையும் தகுதியையும் பாதிக்கும் என்றோ, "BAF" மீதான எந்தவொரு பொறுப்பு/இயலாமையின் கீழ் "BAF" -ஐச் சேர்க்கும் என்றோ பொருள் கொள்ளாது, வாகனத்தைக் காப்பீடு செய்யாவிட்டால், அது கடன்பெறுபவரின் பொறுப்பாகத் தொடர்ந்திருக்கும்;

(ஏ) கடன் வசதிக் காலத்திற்கான தொடர்ந்துவரும் ஆண்டுகளுக்கு அவர் காப்பீட்டு பாலிசி/புதுப்பித்தல் பாலிசியைப் பெறும் போது, அதன் நகலை "BAF" இடமும் கொடுத்து வைப்பார் மற்றும் குறிப்பிட்ட கொள்கைக்காகச் செலுத்த வேண்டிய பிரீமியம் மற்றும் பிற தொகைகள் அனைத்தையும் அவற்றைச் செலுத்த வேண்டிய நிலுவையில் காலந்தவறாமல் செலுத்துவார், மேலும் காப்பீட்டுக் கொள்கையை முழு செலவிலும், விளைவிலும் தொடர்ந்து பேணுவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் செய்வார் மற்றும் குறிப்பிட்ட கொள்கை சீர்குலைக்கப்படக்கூடிய அல்லது அவ்வாறு நடக்கச் சாத்தியமான நடவடிக்கைகள் எதையும் செய்வதைத் தவிர்ப்பார்;

(ஐ) கடன்பெறுபவர் அவ்வாறு செய்யத் தவறுமிடத்தில், "BAF" தனது விருப்பத்தில் (அவ்வாறு செய்ய வேண்டிய கட்டாயமின்றி) அந்த வாகனத்தைக் காப்பீடு செய்யக்கூடும் மற்றும் அது எடுக்கக்கூடிய பிற நடவடிக்கைகளுக்குத் தீங்கிழைக்காமல் உடனே கடன்பெறுபவரிடமிருந்து அதற்கான செலவை மீட்டெடுக்கக்கூடும்;

(ஒ) காப்பீட்டு உரிமைகோரல் எதுவும் பெறப்படும் சந்தர்ப்பத்தில், முதலில் "BAF" இடம் கடன்பெறுபவரின் கடன் தொகையைக் கொடுத்துத் தீர்ப்பது குறித்து நடவடிக்கை எடுத்துவிட்டு, மீதித் தொகை ஏதும் இருந்தால் மட்டுமே அது கடன்பெறுபவரிடம் கொடுக்கப்படும், மேலும் "BAF"-க்குக் கொடுக்க வேண்டிய தொகையை விட, காப்பீட்டுப் பணம் குறைவாக இருக்கும் பட்சத்தில், அந்தப் பற்றாக்குறையை கடன்வாங்குபவர் உடனடியாக "BAF"-க்குச் செலுத்துவார்;

(ஓ) பயன்படுத்தும் காரணத்தால் அல்லது குறித்த வாகனத்தின் உடைமையுரிமையானது கடன்பெறுபவரிடம் இருப்பதுடன் தொடர்பாக ஏதேனும் விபத்து போன்ற காரணத்தால் மூன்றாம் தரப்பு உரிமைகோரலின் கீழ் எழுகின்ற ஏதேனும் பொறுப்புடைமையிலிருந்து BAF-ஐ விடுவித்து வைப்பார், மேலும் குறித்த வாகனத்துடன் BAF-ன் உறவு எதுவும் அந்த வாகனத்திற்கு எதிராக அதன் நிலுவைகளை மீட்டெடுப்பதற்காக அடைமானம் வைப்பதன் அளவு வரை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படும், அதற்கு அப்பால் எதுவும் இல்லை.

(ஔ) கட்டுப்படுத்த முடியாத அல்லது கடவுள் செயல் எதனாலும் வாகனத்திற்கு இழப்பு அல்லது சேதம் ஏற்படுவது பற்றி, தாமதிக்காமல் "BAF" இடம் தெரிவிப்பார்;

(அஅ) இந்த ஒப்பந்தத்தின் கீழ் நிலுவையிலுள்ள மற்றும் செலுத்த வேண்டிய கடன் வசதி, வட்டி மற்றும் பிற தொகைகள் அனைத்தையும் திருப்பிச்செலுத்துவதற்கும் இதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதற்கும், (ஒன்றுக்கு மேற்பட்ட கடன்பெறுபவர் இருக்கும் சமயத்தில்) கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாக இருப்பார்;

(அஆ) இந்த ஒப்பந்தக் காலம் முழுவதும் வாகனத்தை நல்ல நிலையிலும் சேவையளிக்கக் கூடிய/பயன்படுத்தத்தக்க நிலையில் பேணுவார் மற்றும் அதன் சீரான இயக்கத்திற்கு அவசியமான பழுதுபார்ப்புகளைத் தாமதிக்காமல் செய்வார் மற்றும் வாகனத்தைச் சீர்கெடுப்பதற்கு அல்லது அதைப் பயன்படுத்தத் தகுதியில்லாததாகச் சிதைக்கும் அல்லது மாற்றும் செயல் எதையும் செய்வதற்கு அனுமதிக்க மாட்டார் அல்லது "BAF" சார்பாக பாதுகாப்பைப் பற்றாக்குறையாக அளிக்கும் எதையும் செய்யமாட்டார்;

(அஇ) வாகனத்திற்கு உரியதாயிருக்கின்ற எல்லாக் கட்டணங்கள், வரிகள், தீர்வைகள், கூலிகள், செலவுகள் மற்றும் பொறுப்புகளைச் செலுத்தி, தள்ளுபடி செய்வார்;

(அஈ) இந்த ஒப்பந்தத்தின் தவணைக் காலத்தில், மூன்றாம் தரப்பு உரிமைகள் மற்றும்/அல்லது வாகனத்தில் அல்லது அதன் பாகம் எதிலும் ஆர்வத்தைக் கொண்டிருக்க அல்லது உருவாக்க மாட்டார் (விற்பனை, பரிமாற்றம், குத்தகை, அடைமானம், ஒப்பந்தம் அல்லது விருப்பம் அல்லது வேறு வழியில்);

(அஉ) தமது வதிவிட முகவரி அல்லது பணி அல்லது வாகனத்தைப் பொதுவாக வைத்திருக்கும் (நகர்த்த முடியாதபோது) கட்டடங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அந்த மாற்றம் ஏற்பட்டு 10 நாட்களுக்குள் பதிவுசெய்த AD அஞ்சல் மூலம் அதை "BAF"-க்குத் தெரிவிக்கும் பொறுப்பேற்பார்;

(அஊ) பணிக்காக, அழைப்பு/வணிகத்திற்காக அல்லது நீண்ட காலம் தங்குவதற்காக இந்தியாவை விட்டு வெளியேறும் முன்பாக, முன்கூட்டியே பணமளிப்பதற்கான கட்டணங்கள் உட்பட, முதலில் கடன், நிலுவையிலுள்ள/செலுத்தப்படாதுள்ள EMIகள், கட்டணங்கள், கூலிகள், செலவுகள், தீர்வைகளைத் திருப்பிச் செலுத்துவார்;

(அஎ) எந்தத் தன்மையானதாக இருந்தாலும் நிலுவையிலுள்ள அல்லது தாக்கல் செய்யப்படச் சாத்தியமுள்ள அல்லது தாக்கல் செய்யப்பட்ட (பொது அல்லது குற்றவியல் அல்லது பிற எதுவாக இருந்தாலும்) வழக்குகள், நடவடிக்கைகள் அல்லது உரிமைகோரல்கள் இல்லை

(அஏ) ஒப்பந்தம் மற்றும் பிற கடன் தொடர்பான ஆவணங்களின் விதிமுறைகள் அனைத்துடனும் இணங்குவார், மேலும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், இந்தக் கடனுக்குரிய உடன்பாடுகள் அனைத்தையும் மற்றும் காலத்திற்குக் காலமும் முழு வீச்சில் அறிந்திருப்பார்,

(அஐ) குறிப்பிட்ட வாகனத்திற்கான பதிவை இடைநிறுத்தி அல்லது ரத்துசெய்து வைத்திருக்கும் நடவடிக்கை எதையும் அவர் செய்ய மாட்டார் அல்லது செய்ய அனுமதிக்க மாட்டார் என்பதை ஏற்றுக்கொள்கிறார் மற்றும் உறுதியளிக்கிறார்.

(அஒ) சட்டத்தின் கீழ் எந்தவொரு அதிகார அமைப்பாலும் வாகனத்தைக் கைவசப்படுத்தப்பட அல்லது பறிமுதல் செய்யப்பட வைக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் செய்யமாட்டார் அல்லது செய்யுமாறு தூண்ட மாட்டார்.

(அஓ) திருட்டு அல்லது வேறு காரணத்தால் வாகனத்திற்கு விபத்து, இழப்பு அல்லது சேதத்தை ஏற்படுத்தும் நிகழ்வு ஏற்படும் பட்சத்தில், உடனடியாக காப்பீட்டு நிறுவனத்திற்குத் தெரிவித்து, வாகனத்தின் முழு காப்பிடத்தக்க மதிப்பையும் பெறும்பொருட்டு, அதன் பழுதுபார்ப்பு அல்லது மீட்புக்கான அனைத்து நடவடிக்கைகளையும் செய்வார், அதோடு அந்த விபத்து நிகழ்ந்ததைப் பற்றி "BAF"-க்கும் தெரிவிப்பார் மற்றும் உரிமைகோரல்களை மேற்கொள்வதற்கு காப்பீட்டு நிறுவனத்தின் முன்னிலையில் சட்டத்திற்கு அவசியமாக இருக்கக் கூடிய அனைத்துச் செயல்களையும் சம்பிரதாயங்களையும் பூர்த்தி செய்து, வாகனத்தின் பாதுகாப்பானது எந்த விதத்திலும் கெடுக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்வார்.

7.2 "BAF"-க்கு வழங்கப்படும் பிந்தைய தேதியிட்ட காசோலைகளின் கொடுப்பனவு/செல்லுகைக்காக அல்லது "BAF"-ன் பெயரில் அளித்த ECS அறிவுறுத்தலில் பணம் கட்டுவதற்கு, காசோலையை அளித்தவரின் பெயரிலுள்ள கணக்கில் எப்போதும் போதிய இருப்பு இருக்குமாறு கடன்பெறுபவர்(கள்) உத்தரவாதமளிக்கிறார். தொகை அல்லது வட்டியைக் கணக்கிடுவதில் ஏதேனும் முரண்பாடுகள் எழுந்தால், அதன் காரணமாக எந்தவொரு EMI செலுத்தலையும் கடன்பெறுபவர் இடைநிறுத்திவைக்க முடியாது.

7.3 ஏதேனும் காசோலை அல்லது ECS பற்றுரிமைக்கு பணம் அளிக்கப்படாமல் திரும்பினால், அட்டவணையில் கூறியவாறு ஏற்கமறுப்புக்கான கட்டணங்கள், கடன்பெறுபவரின் கணக்கில் வசூலிக்கப்படும்/பற்று வைக்கப்படும். மேலும், அது வேறாக இருக்கும் மற்றும் BAF-ன் உரிமையின் இழப்பு இன்றி, பணமாக மாற்றத்தக்க பத்திரங்கள் சட்டம், 1881-ன் S. 138-142-இன் இன்றைய தேதிக்குத் திருத்தியவாறு அல்லது பணமளிப்பு மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டம் 2007-ன் ஒதுக்கீடுகளின் கீழ் செயற்படுத்தப்படும்.

கடன் வசதியுடன் தொடர்பாக, "BAF" ஆனது:

8. "BAF'ன்" உரிமைகள்:

கடன் வசதியுடன் தொடர்பாக, "BAF" ஆனது:

அ. இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன்பெறுபவரால் செலுத்தாமல் விடப்பட்ட தொகைகள் மற்றும்/அல்லது செலுத்த வேண்டிய தொகைகளுக்காக வாகனத்துடன் தொடர்பான காப்பீட்டின் உரிமையளிக்கப்பட்டவராக இது பெறக்கூடிய பணமளிப்பு/கள் எதையும் பெறவும் சரிப்படுத்தவும் உரிமையுள்ளது;

ஆ. வாகனத்தின் நிலையையும் தரத்தையும் பரிசீலிக்கிற, ஆராய்கிற உரிமை உள்ளது மற்றும் வாகனத்தின் நிலையையும் தரத்தையும் மற்றும் காப்பீட்டுக் கொள்கை உட்பட அதனுடன் தொடர்பான ஆவணங்களையும் பரிசீலிக்க, ஆராய மற்றும்/அல்லது கடன்பெறுபவரின் செலவில் அதன் பரிசீலனைக்காக BAF-க்கு வழங்குவதற்கும், வாகனத்தைப் பரிசீலித்து, ஆராய்ந்து, மறுசெயலாக்கம் செய்வதற்காக (இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீறப்பட்டால்) அது நிறுத்தப்பட்டுள்ள கட்டடங்களுக்குள் நுழைவதற்குரிய கட்டுப்பாடில்லத உரிமையைப் பெறும் நோக்கத்திற்காகவும் எல்லா நியாயமான நேரங்களிலும் "BAF" அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகளை கடன்பெறுபவர்(கள்) அனுமதிப்பர்/ஒத்துக்கொள்வர்;

இ. "BAF'ன்" பிற உரிமைகளைப் பாதிக்காமல், கட்டணம் செலுத்தத் தவறுதல் அல்லது "BAF'ன்" பிணையத்தை, அதாவது "BAF" சார்பாக அடைமானம் வைக்கப்பட்ட வாகனத்தைக் கைப்பற்றத் தவறுதல் உட்பட, கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீறல் ஏற்படும் பட்சத்தில், தாமாக அல்லது அதன் முகவர்கள் அல்லது பிரதிநிதிகள் ஊடாக வாகனத்தை உண்மையில் தமது கட்டுப்பாட்டில் எடுப்பதற்குரிய மற்றும் விற்பதற்குரிய அல்லது நிலுவையிலுள்ள கடன் தொகை அல்லது செலுத்தாமல் விட்ட தொகைகளை மீட்க அல்லது புரிந்துகொள்ள வாகனத்துடன் தொடர்புகொள்வதற்குரிய எல்லா உரிமைகளும் "BAF"-க்கு இருக்கும். பற்றாக்குறையாகவுள்ள தொகை எதையும் கடன்பெறுபவர் "BAF"-க்குச் செலுத்தும் பொறுப்புடையவராக இருப்பார். இந்தச் சரத்து எதுவும் வாகனத்தை BAF விற்பதற்குக் கடமைப்படுத்தாது, மேலும் அத்தகைய பிணையம் குறித்து தற்சார்பாக கடன்பெறுபவருக்கும் உத்தரவாதமளிப்பவருக்கும் எதிராக முன்தொடர BAF-க்கு உரிமையிருக்கும்;

ஈ. எந்தவொரு பதிவு அதிகார அமைப்பு, காப்பீடளிப்பவர், கூறப்பட்ட வாகனத்தின் உற்பத்தியாளர் அல்லது அதன் டீலர்கள்/வியாபாரிகள் போன்றோரிடமிருந்து எந்தப் படிவங்கள், சான்றிதழ் பதிவுப் புத்தகங்கள், காப்பீட்டுக் கொள்கைகள் அல்லது பிற ஆவணங்களை அடைய, பெற, கேட்க அல்லது சேகரிக்க உரிமையுள்ளது;

உ. "BAF" ஆனது அதன் தனியான மற்றும் பிரத்யேக விருப்பத்தில் பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருக்கும் எனக் கருதப்படலாம் என்பதால், நீதிமன்றங்கள் அல்லது சட்ட அமைப்புகளின் மற்றும் அத்தகைய மூன்றாம் தரப்புகளின் அறிவுறுத்தல்களின் கீழ் உள்ளவாறு, கடன்பெறுபவர், அவரது கணக்கு, "BAF" உடனான உறவுமுறை மற்றும்/அல்லது அவரால் பொறுப்பளிக்கப்பட்ட செலுத்தப்படாத தொகை எதையும் (அத்தகவலை கடன்பெற்றவர் வழங்கியிருந்தாலும் "BAF" தானே பெற்றிருந்தாலும் மற்றும் அது கடனைத் திருப்பிச்செலுத்தும் செயல், மதிப்பிடுதல் அல்லது செலுத்தாமல் விடுதல் என எந்த வடிவில் இருந்தாலும்) அதன் தலைமை அலுவலகம், பிற கிளை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள், இந்திய ரிசர்வ் வங்கி, ஏதேனும் மீண்டும் நிதியளிக்கும் அமைப்பு போன்றவற்றுக்கு வெளிப்படுத்த உரிமையுள்ளது. எந்தவொரு மூன்றாம் தரப்பிலிருந்தும் கடன் வசதி மற்றும்/அல்லது கடன்பெறுபவருடன் சம்பந்தமாக பொருந்தும் எனக் கருதுவதால், எந்தவொரு தகவலையும் தேடிப் பெற, "BAF"-க்கு உரிமையும் உள்ளது; மற்றும்

ஊ. வெளிப்படுத்தல் சரத்து : கடன்பெறுபவர்(களின்) கடன் குறித்த நற்பெயரையும் பிற தகவல்களையும் தீர்மானிப்பதற்கு, கடன்பெறுபவர்(களின்) கடந்தகால மற்றும் தற்போதைய கடன்வாங்குதல்(கள்) மற்றும் திருப்பிச் செலுத்தல் வடிவங்கள் தொடர்பான எந்தவொரு தகவலுக்கு கிரெடிட் ப்யூரோவின் சேவைகளை ஈடுபடுத்தியுள்ள பிற வங்கிகள்/நிதி நிறுவனங்களை BAF தொடர்புகொள்ளலாம் என்பதையும், நிதிசார் தகவல் எதையும் மற்றும் எல்லாவற்றையும் பிற நிதி அமைப்புகள் அல்லது பிற ஏதேனும் அமைப்புடன் பகிர்வதற்கு BAF-க்கு சுதந்திரமிருக்கும் என்பதையும் கடன்பெறுபவர்(கள்) ஏற்கிறார்(கள்), பொறுப்பெடுத்து, உறுதிப்படுத்துகிறார்(கள்). வங்கிகள்/நிதிசார் நிறுவனங்கள்/ கிரெடிட் ப்யூரோக்கள்/ பிற முகமைகளால் அத்தகைய தகவலைப் பயன்படுத்துவதற்கு கடன்பெறுபவர்(கள்), BAF-ஐப் பொறுப்பாகவும், பதிலளிக்க வேண்டியவராகவும் நிறுத்தி வைக்க மாட்டாது.

9. அ) கடனைத் திருப்பிச் செலுத்தாமம் விடும் நிகழ்வுகள்.

"BAF" ஆனது கடன்பெறுபவருக்கு எழுத்துமூல அறிவிப்பு மூலம், ஏற்றுக்கொள்ளப்பட்ட முதிர்வு எதுவும் எப்படியிருந்தாலும் கொடுபட வேண்டி வரவுள்ள மற்றும் உடனடியாகச் செலுத்த வேண்டிய கடனின் கீழ் நிலுவையுள்ள எல்லாத் தொகையையும் (முதல், வட்டி, கட்டணங்கள், செலவுகள் உட்பட) தெரிவிக்கலாம் மற்றும் பின்வருபவையில்("BAF"-இன் தனியான முடிவில்) ஒன்று அல்லது பல நடக்கும் பட்சத்தில் கடனைத் தீர்ப்பதற்காக அல்லது "BAF"-க்குச் சார்பாக உருவாக்கப்படும் பாதுகாப்பை அமல்படுத்தலாம்;

புஸான் ஆட்டோ பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Bussan Auto Finance India Private Limited) நிறுவனத்தின் சார்பில்

☞ கடன்பெறுபவர்

x சக கடன்பெறுபவர்

✓ உத்தரவாதமளிப்பவர்

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்

(அ) கடன் அல்லது ஏதேனும் கட்டணம், கூலிகள், செலவுகளை மற்றும் ஏதேனும் ஒரு EMI அல்லது வேறு ஏதேனும் கட்டணத்தின் பகுதியைத் திருப்பிச் செலுத்தத் தவறுகின்ற கடன்பெறுபவர்(கள்) இதில் இருந்த ஒரு வகையில் இதன்கீழ், செலுத்தாமல் விட்ட பிறகும் செலுத்தப்படாமலே இருக்கும்.
(ஆ) குறித்த படிவத்தில் வாகனங்களின் விவரங்களைத் தாக்கல் செய்யத் தவறுகின்ற கடன்பெறுபவர்(கள்); அல்லது
(இ) BAF-க்கு பதிவுச் சான்றிதழின் நகலை வழங்கத் தவறுகின்ற கடன்பெறுபவர்;
(ஈ) இந்த ஒப்பந்தத்தின் நியாயமான 30 நாட்கள் எனும் காலத்திற்குள் வாகனத்தின் RC புத்தகத்தில் செய்துமுடித்த அடைமானம் வைப்பதன் (BAF சார்பில்) ஏற்பிசைவைப் பெறத் தவறுகின்ற கடன்பெறுபவர்(கள்);
(உ) இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் BAF-க்கு கடன்பெறுபவரால் வழங்கப்படும் அல்லது வழங்கப்படவுள்ள PDCகளில் எதுவும், கடன்பெறுபவரால் கொடுப்பனவை நிறுத்துமாறு அளிக்கும் கட்டளைகள் அல்லது ECS பற்றுரிமை பணமாக்கப்படாததன் காரணத்தால் உட்பட, காரணம் எதுவாக இருந்தாலும் அதன் வங்கியாளரால் செலுத்தப்படாததாகத் திருப்பிக்கொடுக்கப்படும்;
(ஊ) ஏதேனும் காரணத்திற்காக வாகனம் திருடப்படுகிறது அல்லது அதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை அல்லது BAF-இன் கருத்துப்படி மொத்த இழப்பு;
(எ) இதிலுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, காப்பீட்டுக் கொள்கையை உரிய நேரத்தில் புதுப்பிக்க, அடைமானம் வைக்கப்பட்ட வாகனத்திற்காக புதுப்பிக்கப்பட்ட கொள்கையின் நகலை BAF இடம் அளிக்க கடன்பெறுபவர் தவறுகிறார்;
(ஏ) இதிலுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, பணமின்றித் திரும்பிச்சென்ற PDCகளுக்கான கட்டணங்களை வங்கிக்குச் செலுத்த கடன்பெறுபவர் தவறுகிறார்;
(ஐ) அடைமானம் வைக்கப்பட்ட வாகனத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்திலுள்ள அல்லது அதன் கீழ் BAF-ன் ஆர்வத்திற்கு கேடுவரக்கூடும் அல்லது ஆபத்து நேரக்கூடும் என்று BAF-ன் கருத்திற்கு நியாயமான ஆதாரங்களை அளிக்கின்ற ஏதேனும் சம்பவம் நிகழ்கிறது;
(ஒ) கடன்பெறுபவர் இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவரது/அவர்களது கடமைகள் எதையும் செய்யத் தவறுகிறார் அல்லது இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் அல்லது நிபந்தனைகள் அல்லது "BAF"-ன் விருப்பில் செயற்படுத்தப்படும் வேறு ஏதேனும் பிணைய ஆவணங்கள், பொறுப்புகள் போன்ற எதையும் மீறுகிறார்;
(ஓ) "BAF"-ன் முன்கூட்டிய எழுத்துமூல ஒப்புதல் இல்லாமல், கடன்பெறுபவர் ஏதேனும் கட்டணம், அடைமானம், ஹென் அல்லது கடன்பெறுபவரின் வாகனத்தின் மீதான பிற வில்லங்கம் எதையும் உருவாக்க முயற்சித்தால் அல்லது உட்கருத்தாகக் கொண்டால், இது "BAF"-க்கு கடன்பெறுபவரின் வேறு ஏதேனும் பொறுப்புகளைப் பாதுகாப்பதற்காகத் தவிர, கூறப்பட்ட நிலுவைகளைத் திருப்பிச்செலுத்துவதற்கான பிணையமாக உள்ளது அல்லது இருக்கும்;
(ஔ) தொழில் தோல்வி, கலைப்பு/முறிப்பு, "BAF"-ன் முன்கூட்டிய எழுத்துமூல ஒப்புதல் இல்லாமல் தவிர, கூட்டு அல்லது மீள்கட்டுமானம், ஆனது கடன்வழங்கியவர்களின் நன்மைக்காக பொதுவான ஒதுக்கீடு, கடன்வழங்கியவர்கள் எவருக்கும் கடன்பெறுபவர் அந்தக் கடனைச் செலுத்தாமல் நிறுத்தினால் அல்லது நிறுத்துவதாக நிறுத்தினால், கடன்பெறுபவருக்கு எதிராக முறைப்பாடு எதையும் தாக்கல் செய்தல்,
(அஅ) கடன் வசதிக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக கடன்வழங்குபவரால் வழங்கப்பட்ட அவரது/அவர்களது பிரதிநிதிகள், உத்தரவாதங்கள் எதனதும் தகவல் இதில் சரியற்றதாக அல்லது உண்மையற்றதாக அல்லது உண்மையை விட்டுத் திரிபுபட்டதாகக் காணப்படுதல்;
(அஆ) கடன்பெறுபவரின் உடைமை/சொத்துகளின் முழுவதும் அல்லது ஏதேனும் பகுதி தொடர்பாக பெறுபவர் ஒருவர் நியமிக்கப்பட்டால் அல்லது கடன்பெறுபவருக்கு எதிராக ஏதேனும் உரித்து, இடையூறு, கைப்பற்றீடு அல்லது பிற செயல் அல்லது அதன் மீது ஏதேனும் பிணையங்கள் தாக்கல் செய்யப்பட்டால் அல்லது விதிக்கப்பட்டால்;
(அஇ) கடன்பெறுபவருக்கு எதிராக ஏதேனும் உரித்து, இடையூறு, கைப்பற்றீடு அல்லது பிற செயல் அல்லது அதன் மீது ஏதேனும் பிணையங்கள் தாக்கல் செய்யப்பட்டால் அல்லது விதிக்கப்பட்டால்;
(அஈ) கடன்பெறுபவர் நொடித்துப் போயிருப்பதை அல்லது கடன்பெறுபவர் கடனைத் தீர்க்க வழியின்றி இருப்பார் அல்லது நொடித்துப்போவார் அல்லது நொடிப்பு நிலைக்கான நடவடிக்கையைச் செய்வார் என்பதைத் தெரிவிக்கும் நடவடிக்கைகளைத் தொடங்கும் "BAF" தவிர வேறு எவரும்;
(அஉ) எந்த வகையிலும் வாகனம் அழிந்துவிட்டால், விற்கப்பட்டால், அப்புறப்படுத்தப்பட்டால், உடைமை மாற்றப்பட்டால், உரித்தாக்கப்பட்டால் அல்லது சிறைப்படுத்தப்பட்டால்;
(அஊ) இதில் வழங்கப்பட்டவாறு பிணையத்தை உருவாக்க கடன்பெறுபவர் தவறுகிறார்;
(அஎ) "BAF" கடன்பெறுபவரின் அமைப்பாண்மை அல்லது மேலாண்மையில் ஏதேனும் கணிசமான மாற்றம் ஏற்படும் போது, BAF-இன் வட்டிகளுக்குக் கேடானது அல்லது தீங்கானது அல்லது BAF"-இன் நம்பிக்கையை அனுபவிப்பதை மேலாண்மை நிறுத்துகையில்;
(அஏ) கடனின் விரிவான இறுதிப் பயன்பாட்டு அறிக்கையை அளிக்குமாறு "BAF"-இன் கோரிக்கையைப் பெற்றும் 10 (பத்து) நாட்களுக்குள் தேவைப்படும் வகையில் மற்றும் தேவைப்படும் நேரத்தில் அந்த விவரங்களை அளிக்க கடன்பெற்றவர் தவறினால்;
(அஐ) கடன்பெறுபவர், வாகனத்தை வர்த்தக அல்லது சட்டத்திற்குப் புறம்பான நோக்கத்திற்குப் பயன்படுத்தினால்;
(அஒ) "BAF" ஆனது ஏதேனும் ஒழுங்காற்று அல்லது பிற காரணங்களுக்காக, கடனைத் தொடர முடியாவிட்டால் அல்லது விரும்பாவிட்டால்;
(அஓ) BAF மற்றும் கடன்பெறுபவருக்கு இடையில் போடப்பட்டுள்ள வேறு ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள அதன் பொறுப்புகளை தீர்ப்பதில் கடன்பெறுபவர் மேற்கொள்ளும் ஏதேனும் தவறு.

ஆ) கடனைத் தீர்க்கத் தவறியமை குறித்த அறிவிப்பு

கடனைத் தீர்க்கத் தவறும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் அல்லது அறிவிப்பு அல்லது காலம் முடிந்த பின்னர் அல்லது இரண்டும் நடக்கும் ஏதேனும் நிகழ்வானது கடனைத் தீர்க்கத் தவறும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினால், அவ்வாறு நிகழ்ந்தால், கடனாளி அந்த கடனைத் தீர்க்கும் நிகழ்வை அல்லது அத்தகைய நிகழ்வைக் குறிப்பிடுகின்ற எழுத்துபூர்வமான அறிவிப்பை 15 நாட்களுக்குள் "BAF"-க்குக் கொடுப்பார்.

இ) கடனைத் தீர்க்காமல் இருப்பதன் பின்விளைவுகள்

I. மேலே கூறப்பட்டவாறு கடனைத் தீர்க்காமல் இருக்கும் பட்சத்தில், ஏற்றுக்கொண்ட முதிர்வு எதுவாக இருந்தாலும், "BAF"-க்கு இவற்றுக்கான உரிமை இருக்கும்:

அ) கடனைத் தீர்மானித்து, கடனின் முழு நிலுவைகளின் மீட்புக்காகவும் கடன் நினைவூட்டல் அறிவிப்பை அனுப்ப;
ஆ) சட்டத்தின் கீழ் விளக்கப்பட்டுள்ள செயல்முறையின்படி, தாமே அல்லது "BAF" நியமித்திருக்கக்கூடிய சட்டத்தரணிகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி, முகமைகள் வழியாக வாகனத்தை தமது கட்டுப்பாட்டில் எடுக்க;
இ) வழக்காடுதல் மற்றும் இணக்கப்படுத்தல் சட்டம், 1996-இன்படி வழக்காடும் நடவடிக்கைகளைத் தொடங்க.
ஈ) அதன் நிலுவைகளை மீட்டெடுக்கவும், பிணையங்களின் அமலாக்கத்திற்கும் பொருந்தும் எனக் கருதக்கூடிய வேறு ஏதேனும் நடவடிக்கையை எடுக்க.

II. கடன்பெறுபவருக்கு அறிவிப்பு வழங்குதல்:

அ. BAF, தாமே மற்றும்/அல்லது தமது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லது முகவர்கள் மூலமாக எழுத்துமூல மற்றும்/அல்லது தொலைபேசிமூலமாக மற்றும்/அல்லது குறிப்பிட்ட வாய்வழித் தகவல்தொடர்புகளின் வழியாக கடன்பெறுபவருடன் தகவல்தொடர்பு கொள்ளும்,
ஆ. கடன்பெறுபவரின் வதிவிடம் அல்லது கடைசியாக அவரது வதிவிடமாக அறியப்பட்ட இடம் அல்லது கடன்பெறுபவர் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய வேறு ஏதேனும் இடத்திற்கு BAF மற்றும்/அல்லது அதன் முகவர்கள் மற்றும்/அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் வருகை தரக்கூடும்,
இ. கடன் ஒப்பந்தப்படி வதிவிடத்தில் அல்லது கடன்பெறுபவரால் BAF-க்கு முறையான ஆதரவு ஆவணங்களுடன் எழுத்தில் தெரிவிக்கப்பட்ட சமீபத்திய முகவரியில், நிலுவை குறித்த அறிவிப்பை வழங்காமல், BAF-ஆனது வாகனத்தை மீண்டும் தமது உடைமையாக்குதல் உட்பட்ட சட்டப்படியான அல்லது பிற மீட்பு நடவடிக்கைகளைத் தொடங்காது
ஈ. BAF அறிவுறுத்தியுள்ளபடி வாகனத்தை மீண்டும் தமது உடைமையாக்கும் நடவடிக்கையைத் தொடங்கும் முன் அல்லது வேறு ஏதும் சட்ட நடவடிக்கைகளுக்கு முன்னர், கடன் வாங்கியவருக்கு நிலுவைகளைச் செலுத்துவதற்கு 7 நாள் காலஅவகாசமுள்ள அறிவிப்பு தரப்படும்

III. அறிவிப்புக் காலத்தைத் தள்ளுபடி செய்ய முடிகின்ற சந்தர்ப்பங்கள்:

பின்வரும் சூழ்நிலைகளின் கீழ், கடன்பெறுபவருக்கான அறிவிப்பைத் தள்ளுபடி செய்யலாம்
அ) அடைமானம் வைக்கப்பட்ட வாகனத்திற்கு அல்லது இந்த ஒப்பந்தத்திலுள்ள அல்லது அதன் கீழ் BAF-இன் ஆர்வத்திற்கு கேடுவரக்கூடும் அல்லது ஆபத்து நேரக்கூடும் என்று BAF-இன் கருத்திற்கு நியாயமான ஆதாரங்களை அளிக்கின்ற ஏதேனும் சம்பவம் நிகழ்கிறது;
ஆ) "BAF"-இன் முன்கூட்டிய எழுத்துமூல ஒப்புதல் இல்லாமல், கடன்பெறுபவர் ஏதேனும் கட்டணம், அடைமானம், ஹென் அல்லது கடன்பெறுபவரின் வாகனத்தின் மீதான பிற வில்லங்கம் எதையும் உருவாக்க முயற்சித்தால் அல்லது உட்கருத்தாகக் கொண்டால், இது "BAF"-க்கு கடன்பெறுபவரின் வேறு ஏதேனும் பொறுப்புகளைப் பாதுகாப்பதற்காகத் தவிர, கூறப்பட்ட நிலுவைகளைத் திருப்பிச்செலுத்துவதற்கான பிணையமாக உள்ளது அல்லது இருக்கும்;
இ) கடன் வசதிக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக கடன்வழங்குபவரால் வழங்கப்பட்ட அவரது/அவர்களது பிரதிநிதிகள், உத்தரவாதங்கள் எதனதும் தகவல் இதில் சரியற்றதாக அல்லது உண்மையற்றதாக அல்லது உண்மையை விட்டுத் திரிபுபட்டதாகக் காணப்படுதல்;
ஈ) கடன்பெறுபவர், வாகனத்தை வர்த்தக அல்லது சட்டத்திற்குப் புறம்பான நோக்கத்திற்குப் பயன்படுத்தினால்.

IV. வாகனத்தை மீட்டுப் பெறுகை:

மீட்டுப் பெறுகைச் செயலைத் தொடங்கும் முன், கடன்பெறுபவருக்கு எழுத்துமூல அறிவிப்பு அனுப்பப்படும்.
வழக்காடுதல் மற்றும் இணக்கப்படுத்தல் சட்டம், 1996 அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வேறு தகுதியான அதிகாரத்தின் கீழுள்ள சட்டப்பிரிவுகள் எதனின் கீழும் நீதிமன்றத்திலிருந்து பெறுபவர் உத்தரவைப் பெற்ற பிறகு, வாகனத்தை மீட்டுப் பெறுதல் நடத்தப்படும்.
நீதிமன்றம் அல்லது ஏதேனும் தகுதியான அதிகாரத்தின் உத்தரவின்படி, வாகனத்தை மீட்டுப் பெறுவதைத் தடுக்காதிருப்பது, மறுக்காதிருப்பது அல்லது எதிர்க்காதிருப்பது கடன்பெறுவரின் கடமையாகும். கடன்பெறுபவருக்கு வாகனத்தின் பொருள்விவரத் தாளை BAF வழங்கும்.
வாகனத்தை மீட்டுப் பெற்ற பிறகு அந்த வாகனத்தின் பாதுகாப்பையும் பத்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு BAF அனைத்துப் பொறுப்புள்ள கவனிப்பையும் எடுக்கும். வாகனத்தின் மீட்டுப் பெறுகையுடனும் அதனது பாதுகாப்புடனும் தொடர்பான எல்லா முந்தைய மற்றும் பிந்தைய செலவுகள், கடன்பெற்றவரால் ஏற்கப்படும்.
தேவைப்பட்டால், அதற்குரிய உள்ளூர் காவல் நிலையத்திற்கு BAF முந்தைய மற்றும் பிந்தைய அறிவிப்பை வழங்கக்கூடும்.

V. வாகனத்தின் மதிப்பீடுகளும் விற்பனையும்:

வாகனத்தை மீட்டுப் பெற்ற பிறகு, 7 நாட்களுக்குள் நிலுவையிலுள்ள எல்லாக் கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளும் கடைசி வாய்ப்பை கடன்பெற்றவருக்கு வழங்குவதற்காக, அவருக்கு விற்பனைக்கு-முந்தைய அறிவிப்பு வழங்கப்படும்.
ஏற்றுக்கொண்ட தீர்வு விதிமுறைகளின்படி, கடன்பெற்றவர் முழுக் கொடுப்பனைச் செலுத்திவிட்டால், கொடுப்பனவின் தீர்வுக்கு உட்பட்டு, கடன்பெற்றவரிடம் அந்த வாகனம் திருப்பியளிக்கப்படும்.
அறிவிப்புத் தேதியிலிருந்து அல்லது இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து 07 நாட்களுக்குள், நிலுவையிலுள்ள முழுக் கொடுப்பனவுகளையும் கடன்பெற்றவர் செலுத்தத் தவறினால், "BAF" மீட்டுப் பெற்ற அந்த வாகனத்தை தமது முகவர்கள் அல்லது பிரதிநிதிகளின் வழியாக ஏலம் அல்லது ஆன்லைன் ஏலம் அல்லது விற்பனை, உரிமைமாற்றத்தை அல்லது BAF அதன் தனித்த விருப்பில் பொருத்தமானதென நினைக்கும் முறையைச் செயற்படுத்தும்.
மீட்டுப் பெற்ற வாகனங்கள் அனைத்தினதும் மதிப்பீடானது, நியாயமான மற்றும் வெளிப்படையான விதத்தில் நிறுவன மதிப்பீட்டுச் செயலாக்கத்தின்படி மேற்கொள்ளப்படும்.
நிறுவனக் கொள்கையின்படி, நிலுவையிலுள்ள அனைத்துக் கொடுப்பனவுகள்/கட்டணங்களையும் திருப்திப்படுத்த, BAF-ஆனது மீட்டுப் பெற்ற வாகனத்தின் விற்பனைச் செயலாக்கத்தைப் பயன்படுத்தும். அனைத்து நிலுவையிலுள்ள தொகைகளையும் சரிப்படுத்திய பிறகு மற்றும்/அல்லது வாகனத்தின் விற்பனைச் செயலாக்கத்திலிருந்து ஏதேனும் கூடுதல் தொகை மீதமிருந்தால், அந்தத் தொகையானது கடன்பெற்றவரின் கோரிக்கையின் பேரில் காசோலை மற்றும்/அல்லது டிமாண்ட் ட்ராஃட் வழியில் நியாயமான நேரத்திற்குள் அவரிடம் திருப்பியளிக்கப்படும்.
எனினும், நிலுவையிலுள்ள எல்லாத் தொகைகள் மற்றும்/அல்லது கட்டணங்களையும் திருப்திப்படுத்துவதற்கு, விற்பனைச் செயலாக்கத்தில் கிடைத்த பணம் போதாது என்றால், வேறு எந்தவொரு உரிமைக்கும் பங்கமின்றி, BAF-ஆனது கடன்பெற்றவரிடமிருந்து மீதித் தொகையை மீட்கும்.

VI. வாகனத்தைத் தாமாகவே முன்வந்து கையளித்தல்:

"BAF" தீர்மானிக்கக்கூடிய விதத்திலும் வடிவமைப்பிலும் முறையாகக் கையொப்பமிட்ட கையளிப்புக் கடிதத்தை கடன்பெற்றவர் வழங்குவார்.
கையளிக்கப்பட்ட வாகனங்கள் அனைத்தினதும் மதிப்பீடானது, நியாயமான மற்றும் வெளிப்படையான விதத்தில் நிறுவன மதிப்பீட்டுச் செயலாக்கத்தின்படி மேற்கொள்ளப்படும்.
BAF, கையளிக்கப்பட்ட அந்த வாகனத்தை தமது முகவர்கள் அல்லது பிரதிநிதிகளின் வழியாக ஏலம் அல்லது ஆன்லைன் ஏலம் அல்லது விற்பனை, உரிமைமாற்றத்தை அல்லது BAF அதன் தனித்த விருப்பில் பொருத்தமானதென நினைக்கும் முறையைச் செயற்படுத்தும்.
நிறுவனக் கொள்கையின்படி, நிலுவையிலுள்ள அனைத்துக் கொடுப்பனவுகள்/கட்டணங்களையும் திருப்திப்படுத்த, BAF-ஆனது கையளிக்கப்பட்ட வாகனத்தின் விற்பனைச் செயலாக்கத்தைப் பயன்படுத்தும். அனைத்து நிலுவையிலுள்ள தொகைகளையும் சரிப்படுத்திய பிறகு மற்றும்/அல்லது வாகனத்தின் விற்பனைச் செயலாக்கத்திலிருந்து ஏதேனும் கூடுதல் தொகை மீதமிருந்தால், அந்தத் தொகையானது கடன்பெற்றவரின் கோரிக்கையின் பேரில் காசோலை மற்றும்/அல்லது டிமாண்ட் ட்ராஃட் வழியில் நியாயமான நேரத்திற்குள் அவரிடம் திருப்பியளிக்கப்படும். எனினும், நிலுவையிலுள்ள எல்லாத் தொகைகள் மற்றும்/அல்லது கட்டணங்களையும் திருப்திப்படுத்துவதற்கு, விற்பனைச் செயலாக்கத்தில் கிடைத்த பணம் போதாது என்றால், வேறு எந்தவொரு உரிமைக்கும் பங்கமின்றி, BAF-ஆனது கடன்பெற்றவரிடமிருந்து மீதித் தொகையை மீட்கும்.

VII. பொது

அ) "BAF" நியமிக்கக்கூடியவாறு, அந்த இருப்பிடத்தில், கடன்பெற்றவரிடம் வாகனம் எந்த நிலையில் வழங்கப்பட்டதோ அதே நிலையில், அதைத் தொடர்ந்து கடன்பெற்றவரால் வாகனத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து இணைப்புகள்/சேர்ப்புகளும் உட்பட வாகனத்தை/சொத்தை, கடன்பெற்றவர் "BAF"-க்குத் திருப்பியளிக்கக் கட்டுப்படுவார், எனினும் சாதாரண தேய்மானம் ஏற்றுக்கொள்ளப்படும்.
ஆ) கடன்பெற்றவர் மேலும், மேலுள்ளவாறு "BAF" அல்லது நிறுவனம் நியமித்த பெறுநர் அந்த வாகனத்தைக் கட்டுப்பாட்டில் எடுப்பதைத் தடுப்பதில்லை அல்லது ஆட்சேபனை தெரிவிப்பதில்லை என்று ஏற்றுக்கொள்கிறார் மற்றும் பொறுப்பேற்கிறார்.
இ) வாகனத்தைக் கட்டுப்பாட்டில் எடுப்பதற்கும் அதைப் பாதுகாப்பதற்கும் "BAF" மேற்கொண்ட கட்டியிழுத்துச் செல்லும் கட்டணங்கள், குடோன் கட்டணங்கள், வாடகை மற்றும் பிற செலவுகள் போன்ற வாகனத்தைக் கட்டுப்பாட்டில் எடுப்பதற்கான பல்வேறு கட்டணங்களையும் கடன்பெற்றவர் செலுத்தக் கட்டுப்படுவார். பற்றாக்குறை எதையும் "BAF"-க்குச் செலுத்துவதற்கு கடன்பெற்றவர் செலுத்தக் கட்டுப்படுவார்
ஈ) பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச்செலுத்த அல்லது அதன் வட்டியைத் திருப்பிச்செலுத்த அல்லது கடன் வசதியின் ஏற்றுக்கொண்ட தவணை எதையும் நிலுவைத் தேதி/களில் செலுத்தத் தவறினால், தனிநபர், நிறுவனம்/வடிவத்தின் பிரிவு மற்றும் இதன் இயக்குநர்கள்/கூட்டாளர்கள்/உரிமையாளர்கள் என எவராக இருந்தாலும் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர் என்று கடன்பெற்றவர்(களின்) பெயரை "BAF"-ஆனது பொருத்தமாக இருக்குமென்று தீர்மானித்த விதத்திலும் வழியிலும் வெளிப்படுத்த அல்லது பிரசுரிக்க "BAF"-க்குச் சுதந்திரமுள்ளது என்று "BAF"-ஆல் கடன்பெறுபவருக்கு குறித்த கடன் வசதியின் முன்நிபந்தனையாக இதன்மூலம் கடன்பெற்றவர்(கள்) ஏற்றுக்கொள்கிறார்(கள்).
உ) இதிலுள்ள அதிகாரங்களின் செயற்படுத்தலில், மேலே உள்ளவாறு கூறப்பட்ட கைகூடுதல்/மீட்டுப் பெறுகையின் விளைவாக, கடன்பெற்றவர் அனுபவிக்கக்கூடிய ஏதேனும் இழப்புகளுக்கு "BAF" கட்டுப்படுத்தப்படாது அல்லது பொறுப்பாகாது.
ஊ) "BAF" அல்லது அதன் முகவர்கள், அதிகாரிகள் அல்லது பெயர் குறிப்பிட்டவர்கள் எவரும், எந்த வழியிலும் பொறுப்பாக மற்றும்/அல்லது கடப்பாடுள்ளவராக இருக்க மாட்டார்கள். பொறுப்பேற்கும் மற்றும்/அல்லது அடைமானம் வைக்கப்பட்ட வாகனத்தைக் கட்டுப்பாட்டில் எடுக்கும் அல்லது கைப்பற்றும் நேரத்தில் அடைமானம் வைக்கப்படும் வாகனத்தில் வைக்கப்படும் அல்லது கிடக்கும் எந்தவொரு உடைமைகள் மற்றும் பொருளினதும் இழப்பு, சேதம், குறைபாடு அல்லது வேறு எதற்கும் "BAF" அல்லது அதன் அதிகாரிகள், முகவர்கள் அல்லது பெயர் குறிப்பிட்டவர்கள் எவரையும் பொறுப்பாளியாக்க மாட்டார் என்று கடன்பெறுபவர் இதன் மூலம் ஏற்கிறார்.

10. ஒதுக்கீடு செய்தல் மற்றும் இடமாற்றம்.

10.1 இந்த ஒப்பந்தம் அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தின் கீழ், "BAF"-இன் கடன் அல்லது வேறு ஏதும் உரிமைகள் மற்றும் பொறுப்புகளின் கீழ் முழு அல்லது பகுதிக் கடன் மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளை, கடன்பெறுபவருக்குக் குறிப்பிடாமல் அல்லது தெரிவிக்காமல் தனது சொந்த விருப்பில் மட்டும் "BAF" முடிவெடுக்கக் கூடியவாறு அந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் வகையில் அல்லது அதன் கீழ் எவருக்கும் / எந்தவொரு நிறுவனத்திற்கும் விற்பதற்கு அல்லது உரிமைமாற்றுவதற்கு (மதிப்பீடு, பிணையம் வைத்தல் அல்லது வேறுவகை மூலம்) "BAF"-க்கு உரிமை இருக்கும். கடன்பெறுபவர்(கள்) அத்தகைய விற்பனை, மதிப்பீடு, பிணையம் வைத்தல் அல்லது உரிமைமாற்றம் மூலம் கட்டுப்படுத்தப்படுவர்.
10.2 முன்பு கூறியவாறு விற்பனை அல்லது உரிமைமாற்றம் செய்யப்படுகையில், "BAF" வழிகாட்டக்கூடியவாறு, கடன் விற்கப்படும் அல்லது உரிமைமாற்றப்படும் அந்த நபரை தமது/தங்களது கடன்வழங்குபவராக ஏற்றுக்கொள்ளவும் கடனை அந்த நபரிடம் திருப்பியளிக்கவும், கடன்பெறுபவர் வெளிப்படையாக ஏற்கிறார்
10.3 எந்தவொரு நபருக்கும் பகுதியளவு அல்லது முழுமையாக இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன்பெறுபவர் தமது உரிமைகள் அல்லது பொறுப்புகளை நேரடியாக அல்லது மறைமுகமாக நியமிக்கத் தகுதியளிக்கப்பட மாட்டார்.

புஸான் ஆட்டோ பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Bussan Auto Finance India Private Limited) நிறுவனத்தின் சார்பில்

☞ கடன்பெறுபவர்

x சக கடன்பெறுபவர்

✓ உத்தரவாதமளிப்பவர்

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்

11. முன்கூட்டி பணம் செலுத்தல்

கடன்பெற்றவர், கடனைத் திருப்பிச்செலுத்தும் தவணைகளுக்கு முன்பாக கணக்கை மூடுவதற்கு முடிவுசெய்தால் அல்லது எண்ணினால், அதாவது அட்டவணையில் குறிப்பிட்டவாறு கடன் தவணைக்காலம் முடிவடைவடஹ்ற்கு முன்பாக கடன் தொகையை முன்கூட்டியே செலுத்தினால், கடன் தொகை குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வீதத்தில் கடன்பெறுபவரிடமிருந்து முன்கூட்டி பணம் செலுத்துதலுக்கான கட்டணங்களைப் பெற "BAF"-க்குத் தகுதியிருக்கும்.

12. உத்தரவாதம்

1. இதன்மூலம், உத்தரவாதமளிப்பவர்(கள்) நிபந்தனையின்றியும் மாற்ற இயலாத வகையிலும், அவரது பொறுப்புகளின் கடன்பெறுபவர்(கள்) மூலம் நிலுவைக் கொடுப்பனவையும் தீர்வையும் "BAF" அளிக்குமாறு கட்டளையிட்டு 15 நாட்களுக்குள் அதனிடம் செலுத்த உத்தரவாதமளிக்கிறார்கள், அந்தக் கட்டளை இதிலுள்ள தேதிக்கு முன் அல்லது பின் இருந்தாலும், "BAF" அளித்த கடனை வட்டி மற்றும் அதன் மீதான எல்லாக் கட்டணங்களையும் சேர்த்து அளிக்கப்படும், அந்தப் பொறுப்புகள் முழுவதுமாகத் தீர்க்கப்படும் வரை உத்தரவாதமளிப்பவர் தொடர்ந்து உத்தரவாதமளிப்பவராக இருப்பார்.
உத்தரவாதமளிப்பவரின்(களின்) பொறுப்பானது, கடன்பெறுபவரின்(களின்) பொறுப்புடன் சேர்ந்து கூடானது மற்றும் பலதரப்பட்டது.
2. கடன்வாங்குபவருடன் மற்றும் BAF-க்கும் தமக்கும் இடையிலுமாக கூட்டாக பரந்திருப்பது தமது பொறுப்பு, அவர்கள் அனைத்து நிலுவைகளுக்கும் BAF-க்கு முதன்மையான கடன்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்பதை உத்தரவாதமளிப்பவர்(கள்) இதன்மூலம் ஏற்கிறார்(கள்).
3. பின்வருபவை மட்டுமன்றி வேறு பலவும் உட்பட, சம்பவத்தின் கீழும் BAF-உடன் தமக்கான பொறுப்பிலிருந்து விலக மாட்டார் என்று உத்தரவாதமளிப்பவர்(கள்) வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார்(கள்):
    அ. BAF-க்கும் கடன்பெறுபவருக்கும்(களுக்கும்) இடையிலுள்ள இந்த ஒப்பந்தத்தின் அல்லது பரிவர்த்தனையின் விதிமுறைகளில் அவர்களது ஒப்புதல் இல்லாமல் செய்யப்படும் ஏதேனும் மாறுபாடு மூலம்
    ஆ. கடன்பெறுபவர்(கள்) விடுவிக்கப்படுகின்ற BAF மற்றும் கடன்பெறுபவருக்கு(களுக்கு) இடையில் செய்யப்படும் ஏதேனும் ஒப்பந்தம் மூலம் அல்லது
    இ. உத்தரவாதமளிப்பவரை(களை) விடுவிக்கக் கூடிய சட்ட விளைவை ஏற்படுத்தும் ஏதேனும் சட்டம் அல்லது BAF-இன் தவிர்ப்பு மூலம் அல்லது
    ஈ. விட்டுக்கொடுப்பை மேற்கொள்கின்ற அல்லது நேரம் தருவதாக அல்லது கடன்பெறுபவரை(களை) செயலாக்குவதில்லை என்று வாக்குறுதியளிக்கின்ற BAF மூலம் அல்லது
    உ. பிணையத்தை இழக்கின்ற BAF மூலம், இதன்மூலம், உத்தரவாதமளிப்பவர்(கள்) அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உறுதியளிப்பின் உரிமைகள் அனைத்தையும் விட்டுக்கொடுக்கிறார்(கள்).
4. கடன்பெறுபவர்(கள்) எதிராக அழைக்கப்பட்டுள்ளார்களா அல்லது நடவடிக்கை எடுக்கிறார்களா என்பதைப் பொருட்படுத்தாமல், BAF இடமிருந்து வரும் எழுத்துமூல அறிவிப்பைப் பெற்ற பிறகு 15 நாட்களில் அல்லது பதிவுத் தபால் AD மூலம் அதை அனுப்பிய பிறகு 18 நாட்களில், இதில் முதலில் வரும் நாளில், உத்தரவாதமளிப்பவர் பணத்தைச் செலுத்த வேண்டிய பொறுப்பு ஏற்படும்.
5. இந்த ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நடுவர் தீர்ப்புச் சரத்தானது உத்தரவாதமளிப்பவரையும் கட்டுப்படுத்துகிறது என்பதையும் நடுவர் தீர்ப்பால் நிறைவேற்றப்படக்கூடிய நடுநிலைத்தீர்ப்பு மூலம் உத்தரவாதமளிப்பவர் கட்டுப்படுத்தப்படுவார் என்பதையும் உத்தரவாதமளிப்பவர் ஏற்கிறார்.
6. கடன்பெறுபவரின் முதன்மையான பொறுப்புடன் சேர்த்து BAF இந்த உத்தரவாதமளிப்பவரை முழுதாக அல்லது பகுதியாக யாரேனும் ஒருவருக்கு (தனித்து அல்லது ஒரு பிணையமாக) நியமிக்கக்கூடும்.

13. ஏனையவை

13.1 இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள உரிமைகளை வினைத்திறமாக அமலாக்குவதற்கு, வழக்கப்பட்ட கடன், வட்டி மற்றும் கடன்பெற்றவர்(கள்) செலுத்த வேண்டிய பிற பணங்களை மீட்பதற்கும் "BAF"-க்கு உதவும் பொருட்டு, வாகனத்தை வாங்குவதற்கு வழங்கப்பட்ட/ பகிர்ந்தளித்த கடன் வசதியின் தொடர்பாக அனைத்து அல்லது ஏதேனும் நடவடிக்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயல்களை நிறைவேற்றுவதற்கு அல்லது செய்வதற்கு/மேற்கொள்வதற்கு உண்மையானதும் சட்டப்படியானதுமான சட்டத்தரணியாக அதன் அதிகாரிகள் அல்லது முகவர்கள் அல்லது அங்கீகரித்த பிரதிநிதி எவரின் ஊடாகவும் செயற்பட இதன்மூலம் கடன்பெறுபவர்(கள்) மாற்றமுடியாதவாறு, "BAF"-ஐப் பெயர்குறிப்பிடுகிறார், உரிமைப்படுத்துகிறார் மற்றும் நியமிக்கிறார், அஃதாவது: .

அ) வாகனத்தை விநியோகிப்பதற்கு தேவைப்படக்கூடியதாக அல்லது உகந்ததாக இருக்கக்கூடியதாக, குறிப்பிட்ட வாகனத்தின் உரிமையை மாற்றுவது, விற்பது அல்லது பயன்படுத்துவது மற்றும் அனைத்து ஒப்பந்தங்கள், பிரகடனங்கள் மற்றும் உபகரணங்களில் கையொப்பமிடுவது மற்றும் செயற்படுத்துவது.

ஆ) வாகனத்தின் உடைமைக்காக மற்றும் அத்தகைய உரிமை மாற்றம், விற்பனை அல்லது பயன்படுத்தல் அல்லது கைகூடுதல் எதையும் பாதிப்பதற்காக முகவர் மற்றும்/அல்லது தரகரை நியமிப்பது அல்லது ஈடுபடுத்துவது.

இ) குறிப்பிட்ட வாகனத்தை விற்பனை செய்கையில் அதன் பதிவுக்காக பொருத்தமான அதிகாரிக்கு அறிவிப்பு வழங்குவது.

ஈ) குறிப்பிட்ட வாகனத்தின் விற்பனை, உரிமை மாற்றம், பயன்பாடு ஆகியவற்றின் மூலம் கவனத்தைப் பெறுவது மற்றும் அதற்காக சரியான ரசீது மற்றும் செல்லுபடியாகும் மற்றும் விளைவிலுள்ள தீர்வை வழங்குவது.

உ) மேலும் பொதுவாக, இது கடன்பெறுபவர்(களால்) தனிப்பட்ட முறையில் செய்யப்பட்டிருந்தால், மேற்கொள்ளப்பட்டிருந்தால் அல்லது நிறைவேற்றப்பட்டிருந்தால், முடிந்தவரை முழுதாகவும் வினைத்திறமாகவும் இந்த வழங்கல்களுடன் தொடர்பான அல்லது கருத்தில்கொள்கின்ற அல்லது தொடர்புகொள்கின்ற எல்லாச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், விஷயங்கள் மற்றும் திட்டங்களையும் செய்வது, மேற்கொள்வது மற்றும் நிறைவேற்றுவது.

13.2 சட்டத்தின் கீழும் இந்த வழங்கலின் கீழும் "BAF"-க்குக் கிடைக்கின்ற உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் நிவாரணிகள் ஆகியவை "BAF" மூலம் அதன் பணியாளர்கள் அல்லது முகவர் வழியாக விதிக்கப்படும் மற்றும் அந்தப் பணியாளர் அல்லது முகவருக்கு, கூறப்பட்ட அதிகாரங்கள் மற்றும் அதிகாரங்களில் எதையும் அல்லது அனைத்தையும் "BAF" பகிர்ந்தளிக்கக்கூடும்.

13.3 இவற்றிலிருந்து அல்லது இவற்றுடன் தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக எழுகின்ற "BAF"-ஆல் அனுபவிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்டதற்கு எதிராக மேற்கொண்ட செயல்கள், உரிமைகோரல்கள், செலவுகள், சேதங்கள், கேள்விகள், கூலிகள், இழப்புகள் மற்றும் பொறுப்புகள் எதனுடனும் தொடர்பான கேள்வி குறித்து சேமிக்கவும் தீங்கற்றிருக்கவும் கடன்பெறுபவர்(கள்) "BAF"-க்கு அளிப்பார்கள் மற்றும் இழப்பீடு வழங்குவார்கள்:

(அ) இந்த ஒப்பந்தத்தின் ஒதுக்கீடுகளுடன் கடன்பெறுபவர்(கள்) இணங்கத் தவறுதல் எதுவேனும் மற்றும்/அல்லது

(ஆ) கடன்பெறுபவர்(களால்) அல்லது அதன் பணியாளரால் அல்லது அதன் முகவர்களால் அல்லது குறித்த வாகனத்தைப் பயன்படுத்துமாறு கடன்பெறுபவர்(களால்) அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்படாத வேறு நபர்களால் வாகனத்தின் உடைமை, இயக்கம் மற்றும் பயன்பாடு மற்றும் அந்த நோக்கத்திற்கு தற்செயலாக நிகழக்கூடியவை ஆகியவற்றால் ஏற்படக் கூடிய மூன்றாம் தரப்புப் பொறுப்பு உட்பட எந்தவொரு பொறுப்பும் மற்றும்/அல்லது

(இ) கடன்பெறுபவர்(கள்) வழங்கிய பிரதிநிதித்துவங்களும் உத்தரவாதங்களும் பொய்யாக அல்லது உண்மையற்றவையாக இருந்த காரணத்தால் "BAF"-க்கு ஏற்பட்ட அல்லது அவஸ்தையுண்டாக்கிய ஏதேனும் உரிமைகோரல்கள், இழப்புகள், கேள்விகள், செயல்கள், செலவுகள், கூலிகள் மற்றும் பொறுப்புகள் எதுவும் மற்றும்/அல்லது அடைமானம் வைக்கப்பட்ட வாகனமானது எந்தவொரு வில்லங்கம் அல்லது பழியில் இல்லாமல் இருக்காத காரணத்தால் "BAF"-க்கு ஏற்பட்ட அல்லது அவஸ்தையுண்டாக்கிய ஏதேனும் உரிமைகோரல்கள், இழப்புகள், கேள்விகள், செயல்கள், செலவுகள், கூலிகள் மற்றும் பொறுப்புகள் எதுவும்

13.3 வேறு ஏதேனும் விதி அல்லது இந்த ஒப்பந்தத்திற்கு கேடு ஏதுமின்றி, இந்த ஒப்பந்தத்தின் கீழ் "BAF"-க்கு கடன்பெறுபவர் செலுத்திய கட்டணம் எதுவும் பின்வரும் வரிசையில் அல்லது பொருத்தமானது எனக் கருதப்பட்டவாறு, "BAF"-ஆல் பயன்படுத்தப்படும் என்று தரப்புகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்கின்றன-

அ. இந்த ஒப்பந்தத்தின் கீழ், பிணையத்தைச் சீர்காக்க, நடைமுறைப்படுத்த மற்றும் பேண மற்றும் அதனால் "BAF"-க்கு கடன்பெறுபவரால் செலுத்த வேண்டிய கடன், வட்டி மற்றும் நிலுவையிலிருந்த மற்றும் செலுத்தக்கூடிய தொகைகள் அனைத்தையும் மீட்க, "BAF" செலவு செய்திருக்கக்கூடிய கட்டணங்கள், கூலிகள் மற்றும் செலவுகள்.

ஆ. ஒப்பந்தத்தின் கீழ் திரட்டப்பட்ட வட்டி, கட்டணங்கள்

இ. கடனின் மூலதனத் தொகை

ஈ. செலுத்தாமலுள்ள தொகைகளின் மீதான வட்டி மற்றும் செலுத்தாமல் விட்ட தொகை/கள் மீதான இலாப இழப்பு

உ. முன்கூட்டிச் செலுத்தும் கட்டணங்கள், வங்கிக் கட்டணங்கள் (காசோலை திரும்பிச்செல்லும் கட்டணங்கள்) & நிலுவையிலுள்ள மற்றும் செலுத்த வேண்டிய பிற கட்டணங்கள்,

13.4 இந்த ஒப்பந்தம் மற்றும் இதற்கு இணங்க பிற ஆவணங்களின் கீழ் கடன் வழங்குபவராக தமது உரிமைகள், அதிகாரங்கள் அல்லது நிவாரணிகளை நடைமுறைப்படுத்துவதில் "BAF" மூலம் ஏதேனும் தாமதம் அல்லது விலக்கு ஆனது உரிமை, அதிகாரம் அல்லது நிவாரணியைப் பாதிக்காது அல்லது "BAF"-ஆல் அதன் விட்டுக்கொடுப்பு அல்லது [illegible] பொருள்கொள்ளப்படாது என்று தரப்புகள் ஒப்புக்கொள்கின்றன

13.5 இந்த ஒப்பந்தமும் இதன் அட்டவணையும், இதற்கு இணங்க வேறு ஏதேனும் ஆவணமும், தரப்புகளுக்கு இடையிலான ஒற்றை ஒப்பந்தத்தைக் குறிக்கின்றன என்று தரப்புகள் உறுதிப்படுத்துகின்றன.

13.6 எந்தவொரு தொடர்பு, விண்ணப்பப் படிவங்கள் அல்லது எப்படியாகினும் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படும் என ஏற்றுக்கொண்ட எதிலும் விவரிக்கப்பட்டுள்ள "BAF"-க்கு கடன்பெறுபவரால் செய்யப்பட்ட பொறுப்புகள் மற்றும் பிரதிநிதித்துவங்கள் தொடர்பாக, தரப்புகளுக்கு இடையிலான முந்தைய கலந்துரையாடல்கள் மற்றும் பிரதிநிதித்துவங்கள் அனைத்தையும் இந்த ஒப்பந்தம் விலக்குகிறது மற்றும் "BAF" சிற்றேடு உட்பட அவற்றின் உள்ளடக்கத்துடன் சீரற்றது.

13.7 இன்றைய தேதிக்குப் புதுப்பிக்கப்பட்டுள்ள பேசி முடிவுசெய்யத்தக்க உபகரணங்கள் சட்டம், 1881, குற்றவியல் செயல்முறைக் குறியீடு, குடியியல் செயல்முறைக் குறியீடு அல்லது வேறு ஏதேனும் மன்றத்தின் கீழ் எந்தவொரு நிவாரணியைச் செய்யும் போதும், வட்டியுடன் சேர்த்துச் சுமத்தப்படும் செலவுகளுக்கும் கடன்வாங்குபவர்(கள்) பொறுப்பாக இருப்பர்.

13.8 தரப்புகளின் முகவரிகள் அட்டவணையில் கீழுள்ளவாறு குறிப்பிடப்பட்டிருக்கும். கடன்வாங்குபவர் மற்றும் உத்தரவாதமளிப்பவர், தமது/தங்களது முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் அதை "BAF"-இடம் தெரிவிக்க வேண்டும்.

13.9 ஒரு தரப்பிலிருந்து மற்றத் தரப்புக்குக் கொடுக்க வேண்டிய, இந்த ஒப்பந்தத்தின்கீழ் தேவைப்படும் அல்லது அனுமதிக்கப்படும் ஏதேனும் அறிவிப்பு அல்லது கோரிக்கை எழுத்தில் மட்டுமே இருக்கும் மற்றும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு பிற தரப்பின் அல்லது ஒப்பந்தம் தொடரும் போது புதுப்பித்த வேறு ஏதேனும் முகவரிக்கு அனுப்பப்படும் (அல்லது கடன்பெறுபவர் மற்றும் உத்தரவாதமளிப்பவருக்கு, "BAF"-ஆல் கடைசியாக அறியப்பட்ட கடன்பெறுபவரின்/உத்தரவாதமளிப்பவரின் முகவரியில்):

(அ) "BAF"-ஆல் வழங்கப்பட்டால், தனிப்பட்ட வழங்கல், தொலைநகல் அல்லது தபால் மூலம் வழங்கப்படக்கூடும் மற்றும் பரிமாறப்பட்டுள்ளது என்று கருதப்பட்டால் அல்லது கடன்பெறுபவர்/உத்தரவாதமளிப்பவரால் பெறப்பட்டது என்றால், தனிப்பட்ட வழங்கல் மூலம் அளிக்கப்பட்டிருந்தால், அவ்வாறு வழங்கப்படும் போது மற்றும் கடன்பெறுபவர்/உத்தரவாதமளிப்பவருக்கு தொடர்ந்து அனுப்புவதற்காக தபால் என்றால் அவரது கடைசியாக அறியப்பட்ட/ மாற்றப்பட்ட முகவரிக்கு பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் அதை அனுப்பிய பிறகு 3 நாட்கள் முடிந்திருந்தால் மற்றும்

(ஆ) அனைத்துத் தொடர்புகளிலும், கடன்பெறுபவர்(கள்) மற்றும் உத்தரவாதமளிப்பவர்(கள்) மூலம் கணக்கு எண்ணும் முழு பதிவு எண்ணும் குறிப்பிடப்பட வேண்டும்.

13.10 ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் என்றால் கூட்டு மற்றும் பலவாக இருப்பதற்கு கடன்பெறுபவர்களின் பொறுப்புரிமை
இந்தக் கடன் தொடர்பாக கடன்பெறுபவர்களின் பொறுப்பு கூட்டாகவும் பலவாகவும் இருக்கும்.

14. பிரிக்கப்படும் தன்மை குறித்த சரத்து

எந்தவொரு நபருக்கும் அல்லது சம்பவத்திற்குமான இந்த ஒப்பந்தம் அல்லது விண்ணப்பத்தின் ஏதேனும் உட்பிரிவு/சரத்து/துணைச்சரத்தானது ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்கு அல்லது அரசாங்கக் கொள்கை காரணமாக செல்லுபடியற்றது அல்லது எந்தவொரு அளவுக்கும் அமலாக்கப்பட முடியாதது என்றால், செல்லுபடியற்ற அல்லது அமலாக்கப்பட முடியாதது தவிர நபருக்கான அல்லது சம்பவங்களுக்கான இந்த ஒப்பந்தம் மற்றும் விண்ணப்பத்தின் மீதிப்பகுதி அதன்மூலம் பாதிக்கப்படாது, மேலும் இந்த ஒப்பந்தத்தின் ஒவ்வொரு உட்பிரிவும் செல்லுபடியாகும் மற்றும் சட்டத்தால் அனுமதிக்கப்படும் அளவுக்கு முழு அளவில் அமலாக்கத்தக்கது.

15. நடுவர் தீர்ப்பு

ஒப்பந்தம் அல்லது செல்லுபடி காலம் அல்லது மீறல் அல்லது அவற்றின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளிலிருந்து அல்லது தொடர்பாக தரப்புகளுக்கு இடையே எழுகின்ற, இந்த ஒப்பந்தம், பிணையம் மற்றும் இதனுடன் தொடர்பான பிற ஆவணப்படுத்தலின் விளக்கம் மற்றும் அமலாக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற அனைத்து அம்சங்களும் உட்பட, முரண்பாடு, உரிமைகோரல்கள் அல்லது வேறுபாடு எதையும் தரப்புகள் இணக்கமாகத் தீர்த்துக்கொள்வர். இவ்வாறு தீர்க்கத் தவறினால் அது, வழக்காடுதல் மற்றும் இணக்கப்படுத்தல் சட்டம், 1996-இன் சட்டப்பிரிவுகளின்படியும் இந்திய நடுவர் சபையின் வழக்காடுதல் விதிகளுக்கு அமையவும், நடுவர் தீர்ப்புக்காக BAF மூலம் நியமிக்கப்படவுள்ள தனித்த அதிகாரமுள்ள நடுவரிடம் தெரிவிக்கப்படும், அந்த தனித்த அதிகாரமுள்ள நடுவரால் அளிக்கப்படும் தீர்ப்பே இறுதியாகவும் தரப்புகள் கட்டுப்பட வேண்டியதாகவும் இருக்கும்.
இவ்வாறு இதை விசாரிக்க அனுப்பப்படும் நடுவர் இறந்தால் அல்லது ஏதேனும் காரணத்திற்காகச் செயற்பட முடியாமல் போனால், BAF-ஆனது நடுவராகச் செயற்பட வேறொருவரை நியமிக்கலாம் என்பது இந்த ஒப்பந்தத்தின் விதியாகும். அவரது/அவர்களது முந்தையோர் விட்டுச்சென்ற நிலையிலிருந்து மேற்கோள்களைத் தொடர்வதற்கு அத்தகைய நபருக்குத் தகுதியளிக்கப்படும்.
வழக்காடல்கள் நடக்கும் இடம் புதுடில்லியாக அல்லது BAF-இன் கிளை அலுவலகமாக இருக்கும், இதை நியமிக்கப்பட்ட நடுவரின் வசதி/கருத்துப்படி தீர்மானிக்கப்படும்.

16. சட்ட அதிகாரம்

இதில் கூறப்பட்டுள்ளவை மட்டுமன்றி ஏனைய எல்லா விஷயங்களுக்கும், புதுடில்லியிலுள்ள நீதிமன்றங்கள் அல்லது கிளை அலுவலகங்கள் அல்லது BAF மட்டுமே சட்ட அதிகாரம் கொண்டிருக்கும்.
இந்தியச் சட்டங்கள் இந்த ஒப்பந்தம், பிணையம் மற்றும் தொடர்புள்ள பிற ஆவணமாக்கம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும்.

ஏற்பு-

1/ மேலே பெயர்குறிப்பிட்டுள்ள கடன்பெறுபவர்(கள்) மற்றும் உத்தரவாதமளிப்பவர்(கள்) ஆகிய நான்/ நாங்கள், இதன்மூலம் தெரிவிப்பதாவது-
i. நான்/நாங்கள் முழு ஒப்பந்தத்தையும் படித்துப் புரிந்துகொண்டோம் / அது எனது/எங்கள் முன்னிலையில் நிரப்பப்பட்டுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உட்பட, எனது/எங்கள் மொழியில் அது எனக்கு/எங்களுக்குப் படித்துக்காட்டப்பட்டு, விளக்கப்பட்டுள்ளது.
ii. நான்/நாங்கள் இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தைச் சரிபார்த்து, புரிந்துகொண்ட பிறகு எனது/எங்கள் கையொப்பத்தை இட்டுள்ளோம்.
iii. நான்/நாங்கள் ஆங்கில மொழியில் மட்டுமே என்னுடன்/எங்களுடன் ஏதேனும் எழுத்துப்பூர்வ அல்லது வேறுவகையில் தகவல்தொடர்புகொள்ள BAF-ஐ அனுமதிக்கிறேன்/அனுமதிக்கிறோம்.
இதன் பிறகுள்ள அட்டவணையில் எழுதப்பட்டுள்ள நாளில் மற்றும் ஆண்டில் இந்த வழங்கல்களை நிறைவேற்றுவிக்க/ நிறைவேற்றப்படவுள்ளதாக ஏற்படுத்துவிக்க இங்கு தெளிவுபடுத்துகிறேன்/ தெளிவுபடுத்துகிறோம்.

•கடன்பெறுபவருக்கு

☞ கடன்பெறுபவர்	*X* சக கடன்பெறுபவர்	✓ உத்தரவாதமளிப்பவர்

சாட்சி:

கையொப்பம்: ____________	**கையொப்பம்:** ____________
பெயர்: ____________	**பெயர்:** ____________
முகவரி: ____________	**முகவரி:** ____________
____________	____________

புஸான் ஆட்டோ பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Bussan Auto Finance India Private Limited) நிறுவனத்தின் சார்பில்
கையொப்பமிட்டு, வழங்கியவர்
தமது அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடும் நபரின் கையால்
புஸான் ஆட்டோ பைனான்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Bussan Auto Finance India Private Limited) திரு/செல்வி ____________

அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்